இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்


PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 13 | திகதி : 21.09.2025 | விலை : 50.00

## பொதுநிலையினரின் பாதுகாவலராக புனித தேவசகாயம் திருத்தந்தை அறிவிப்பு





புனித தேவசகாயத்தை இந்தியாவில் பொதுநிலையினரின் பாதுகாவலராக அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளார் திருத்தந்தை லியோ. இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் கோரிக்கையைத் தொடர்ந்து, திருவழிபாடு மற்றும் அருள் அடையாளங்களுக்கான வத்திக்கான் ஆணையம் வழியாக இந்த அறிவிப்பு 2025, ஜூலை 16 அன்று வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு, 2025, அக்டோபர் 15 அன்று வாரணாசியில் உள்ள புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது. புனித தேவசகாயம் (1712-1752), நட்டாலத்தில் நீலகண்ட பிள்ளை எனப் பிறந்து, 1745 இல் கிறித்தவ மதத்தை ஏற்று, "தேவசகாயம்" என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். தனது இறைநம்பிக்கையை மறுக்க மறுத்ததற்காகக் கடுமையான துன்புறுத்தல்களையும் சிறைவாசத்தையும் சந்தித்த அவர், 1752-இல் உயிர்த்தியாகம் செய்தார்.

அவர் 2012இல் அருளாளராகவும், 2022-இல் புனிதராகவும் அறிவிக்கப்பட்டார். அவரது துணிவு, நம்பிக்கையின் உறுதி, நீதி குறித்த அர்ப்பணிப்பு ஆகியவற்றின் முன்னுதாரணமாக, இந்தியாவில் பொதுநிலையினரின் பாதுகாவலராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார். இந்த அறிவிப்பு இந்தியக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பொதுநிலையினர் பணிக்குழுவுடன் இணைந்து கொண்டாடப்பட உள்ளது.

## "யாழ்ப்பாண மறைசாட்சிகள்" கூத்திசை நாடகம்



யூபிலி ஆண்டு சிறப்பு நிகழ்வாக யாழ். புனித மரியன்னை பேராலயப் பங்குமக்களால் ஆற்றுகை செய்யப்பட்ட "யாழ்ப்பாண மறைசாட்சிகள்" கூத்திசை நாடகம் கடந்த 14ஆம் திகதி பேராலய வளாகத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் அரங்கிலும் அரங்கப்பின்னணியிலும் 25ற்கும் அதிகமான கலைஞர்களின் பங்குபற்றுதலோடு ஆற்றுகை செய்யப்பட்ட இந்நாடகத்தை அருட்தந்தை பாலதாஸ் பிறாயன் அவர்கள் எழுதியதுடன் அண்ணாவியார் அன்று யூலியஸ் மற்றும் பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை றொகான் டியோனி ஆகியோர் இணைந்து நெறியாள்கை செய்திருந்தனர்.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள், அயற்ப்பங்குமக்க ளெனப் பலரும் கலந்துகொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாண இராச்சிய கத்தோலிக்கர் எதிர்நோக்கிய துன்பங்களையும் இலங்கை நாட்டிற்கு வருகைதந்த புனித யோசேவாஸ் அடிகளாரின் பணியையும் டொன் பேதுருவின் கிறிஸ்தவ விசுவாசத்தை வெளிப்படுத்தும் மறைசாட்சியத்தையும் சித்தரிப்பதாக இந்நாடகம் அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## வைர விழாக் காணும் அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகள்



யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருவாகிய அருட்ப்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தமது குருத்துவத்தின் வைரவிழாவினை ஒக்டோபர் 3ம் திகதி கொண்டாடி மகிழ் கின்றார். அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தமது 60வது குருத்துவ வாழ்வில் யாழ் போராலய உதவிப் பங்குத்தந்தையாகவும், பங்குத்தந்தையாக மன்னார் மறைமா வட்டத்தில் பண்டிவிருச்சான், அளம்பில் பங்குகளிலும் யாழ் மறை மாவட்டத்தில் பருத்தித்துறை, நெடுந்தீவு, இளவாலை, சில்லாலை, மாதகல், யாழ் அடைக்கல அன்னை ஆலயம், சுண்டுக்குளி யுவானியார் ஆலயம் ஆகிய பங்குகளிலும் ப.2

## இளையோர் ஏற்பாட்டில் யுவானியார் ஆலயத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் பிறப்பின் முப்பொன் விழா



சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பிறப்பின் பொன் விழா நிகழ்வுகள் இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் கோலாகலமாகக் கடந்த 20ம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்பணி சகாய நாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்பணி செ. அன்புராசா அடிகளாரும், சிறப்பு விருந்தினராக அருட்ப்பணி யோ. யு.கமலநாதன் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். சிறப்பு நிகழ்வுகளாக நல்லூர் ப.2

## திருப்பாலத்துவ சபை சிறாருக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு



திருப்பாலத்துவ சபை மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த 06ஆம் திகதி சில்லாலை புனித கதிரை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை லியோ ஆம்ஸ் ரோங் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநர் அருட்தந்தை எயின்சிலி றொஷான் அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருப்பலியில் 77 பிள்ளைகளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து ஆலய டெய்சி மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் பலவும் இடம் பெற்றன. இளவாலை மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை இணைப்பாளர் அருட்தந்தை நிக்ஸன் கொலின்ஸ் மற்றும் அருட்சகோதரிகள், மறையாசிரியர்கள், பங்குமக்களென பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ் குருமுதல்வர் தலைமையில் றொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்த திருவிழா



கனடா றொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. 3ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றதுடன் நற்கரு ணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடக மைய இயக்குநரும் திருமறைக்கலாமன்ற உதவி நிர்வாக இயக்குநருமான அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து 14ஆம் திகதி மாலை 3:30 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெற்றதுடன் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருவிழாத் திருப்பலி நிறைவில் அன்னையின் திருச்சொருபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## அருட்பணி யூட் அவலின் அமதி. அகால மரணம்



யாழ்மாகாண அமலமரித்தியாகிகள் சபைக்குருவும், மன்னார் இலுப்பைக்கடவை அந்தோனியார்புரம் பங்குத்தந்தையும் எங்கள் பங்கின் மைந்தனும் அருட்தந்தை அவலின் அடிகளார் 21.09.2025 இன்று வீதிவிபத்தொன்றில் காலமாகிவிட்டார். அருட்தந்தை அவலின் அடிகளார், யாழ்ப்பாணம் இளவாலையில் 12.12.19 80ம் ஆண்டு பிறந்தார். யாழ் இளவாலை றோ.க.த.க பாடசாலை, புனித கென்றி அரசர் கல லூரி, கிளிநொச்சி பற்றிமா வித்தியாலயம் ஆகியவ ற்றின் பழைய மாணவரான அருட்தந்தை அமலம ரித்தியாகிகள் சபையில் இணைந்து 2006ம் ஆண்டில் தனது முதலாவது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டார். கண்டி அம்பிட்டிய குருமடம் மற்றும் யாழ் சவேரியார் குருத்துவ ப.2

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## ஒக்டோபரில் கரங்களில் செபமாலை எடுப்போம் புகழ்மாலை தொடுப்போம்

மரியா – பேரருள் களஞ்சியம்! அவர் அருள் மிகப்பெற்றவர் (லூக். 1:28) அருளின் ஊற்று: வளங்களின் வாய்க்கால். அலைகள் மோதும் உலகின், ஆழிப் பெருங்கடலில் ஆதவனைச் சுமந்து வந்த ஓவியமான ஓடம் அவர்.

யோசேப்பைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட தேன்தமிழ்க் காவியம் தேம்பாவணியில் தன் துணையை அறிந்த போது யோசேப்பு..

“ பாருலகு அளித்துக் காக்கப்

பரமனை உயிர்க்கும் தாயே!

பேருலகு உவப்புக் கன்னி

பெயர்கிலள் பெறுவாள் ஆகில்,

ஈருலகு இறைஞ்சும் அன்னாள்

என் மணத் துணைவி ஆமோ! (7:72)

என்று மகிழ்ந்து ஏற்றுக்கொண்டதாய் வீரமாமுனிவர் வடிக்கிறார். முன்பொருநாள் உள்ளம் கலங்கிய கணவரை, இன்று உற்று நோக்கினால் அவர் மனத்துயர் நீங்கும் என அறிந்த அன்னையின் உதடுகளில்...

உருகிய துணைவனை உருகி நோக்கினள்:

பெருகிய துயர்செயும் பிணிகள் ஏதையா?

மருகிய அடிமையா வளைவது எது - என

அருகு இயைந்து அன்புற அறைந்து

இறைஞ்சினாள்! (7:83)

என்றே வீரமாமுனிவர் தீட்டுகிறார். அத்தகைய சிறப்பு மிக்க நம் அன்னை மரியா. நமது வாழ்வின் நம்பிக்கை விளக்காக, இயேசுவை அடையும் இனிய வழியாக நம்முடன் பயணிக்கிறார்.

“இறைவன்கண்களில்விலையேறப்பெற்ற வராய்...” (எசா 43:4) விளங்கிய அன்னையைத் தூய்மை, தாய்மை, மேன்மை என்னும் அணிகலன்களால் இறைவன் அழகு செய்தார். அன்னையைத் தனக்கு ஏற்ற இனிய இல்லிட மாய் அமைத்து, மண்ணில் மலர்ந்த மாணிக்க மாய், மாசில்லாக் கன்னிகையாய், மகிமை யின் வாசலாய், திரு அவையின் தாயாய், திருத் தூதர்களின் அரசியாய், புதுமைகள் புரியும் புண்ணியக் கரமாய், பரிந்து பேசும் அட்சயப் பாத்திரமாய். அண்டி வந்தோரின் அடைக்கலமாய் இறைவன் நமக்குத் தந்திருக்கிறார். அவ்வாறே.

உலகம் மூன்றினும் உவமை நீக்கிய

இலயை மூன்றினும் இழிவு இல் கன்னியாய்.

அலகு இல் மூன்றினுள் நடுவ மைந்தனை

நிலவு மூன்றினும் நிறப்ப ஈன்றனள்

என்கிறது மற்றோர் இலக்கியப் படைப்பு. அதாவது, இமயம், பூமி, பாதாளம் எனும் மூன்று உலகங்களிலும் ஒப்புமை இல்லாதவர் மரியா என்றும், பாவம், குற்றம், களங்கு எனும் மூன்று களங்கங்களும் இல்லாத தூய கன்னியாய் வாழ்ந்தவர் என்றும், மூன்று பிறப்புகளுக்கும் மேலான இறை மைந்தனை, இயேசுவைத் தன் கருவறையில் தாங்கி, விண்ணவர், தூயவர், மானிடர் எனும் மூன்று நிலைகளுக்கும் ஒளிதரும் நிலவாகப் பிறந்தார் என்றும் பெருமைப்பட எடுத்து ரைக்கிறது.

தான் உற்றுநோக்குபவருக்குக் குறைதீர்க் கவும், தன்னை உற்றுநோக்குபவருக்கு நிறை வளிக்கவும் செபமாலை அன்னையிடம் ஒக் டோபர் மாதம் தனில் எம் குடும்பங்களை திருச் செபமாலை வழியாக ஒப்புக்கொடுப்போம்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

# நீதியும் சமத்துவமும் கொண்ட உலகைப் படைப்போம் - திருத்தந்தை லியோ வேண்டுகோள்!



விலைமதிப்பில்லா நமது வாழ்க்கையை நாம் எவ்வாறு வாழ்கிறோம்? எனத் திருத்தந்தை லியோ கேள்வி எழுப்பியுள்ளார்.

வத்திக்கானில் நம்பிக்கையாளர்களைச் சந்தித்த திருத்தந்தை, "நாம் நமது வாழ்க்கைக்கோ அல்லது நாம் பயன்படுத்தும். பொருள்களுக்கோ உரிமையானவர்கள் அல்ல. மாறாக, அவை அனைத்தும் கடவுளிடமிருந்து வந்த கொடைகளே. அந்தக் கொடைகளை நமது கண்காணிப்பிலும் பொறுப்பிலும் பராமரிப்பிலும் கடவுள் ஒப்படைக்கிறார்" என்று தெரிவித்தார். மேலும், நம்மையும் நம் உடைமைகளையும், பூமியின் வளங்களையும் எவ்வாறு நாம் பேணிப் பாதுகாக்கிறோம் என்பதற்கான கணக்கைக் கொடுக்க ஒருநாள் நாம் அழைக்கப்படுவோம் என்பதையும் நினைவூட்டினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒருவர் கடவுளுடனும் மற்றவருடனும் கொண்டுள்ள நட்பே உண்மையான செல்வம் எனவும், நமது தனிப்பட்ட சுயநலத்தைத் தவிர்த்து பிறர் நலனுக்காக இவ்வுலகின் பொருள்களையும், நம் வாழ்க்கையையும் அதிகமாகப் பயன்படுத்தவேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், நாம் சுயநலத்தின் பாதையைப் பின்பற்றுகிறோமா? நம்மைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறோமா? எல்லாவற்றையும் கடவுளிடமிருந்து வந்த பரிசாக அங்கீகரிக்கிறோமா? என்ற கேள்விகளை நமக்கு நாமே எழுப்பிக்கொண்டு, நீதியான மற்றும் சமத்துவமான உலகத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் முன்வரவேண்டும் எனவும் திருத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மக்களை அழிக்கும் ஆயுதங்களிலிருந்து ஆட்சியாளர்கள் விடுபட வேண்டும்

### - திருத்தந்தை

மக்களை அழிக்கும் ஆயுதங்களையும், தொழிலாளர்களை இழிவுபடுத்தும் மனப்பான்மையையும் மாற்றவேண்டும் எனத் திருத்தந்தை லியோ வலியுறுத்தியுள்ளார், வத்திக்கானில் உள்ள புனித அன்னாள் பங்கு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, “இறைவார்த்தை மக்களைப் போட்டி மனப்பான்மையுடன் பிரிக்கக் கூடியது அல்ல. மாறாக, அது அனைவரையும் ஓர் உள்மனப் புரட்சியை நோக்கி, இதயத்தில் தொடங்கும்

ஒரு மாற்றத்தை நோக்கிப் பயணிக்கத் தூண்டக்கூடியது.” எனத் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளில் உள்ள ஆட்சியாளர்களுக்காக இறைவேண்டல் மேற்கொண்ட திருத்தந்தை, அவர்கள் மனித குலத்திற்கு எதிராகச் செல்வத்தைப் பயன்படுத்துவதற்கான சோதனையில் இருந்து விடுபடவேண்டும் எனவும். மக்களை அழிக்கும் ஆயுதங்களையும், தொழிலாளர்களை இழிவுபடுத்தும் மனப்பான்மையையும் மாற்றவேண்டும் என்றும். கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், கடவுளுக்குப் பணி செய்பவர்கள் செல்வத்திலிருந்து விடுபடுகிறார்கள் ஆனால், செல்வத்திற்குப் பணி செய்பவர்கள் அதன் அடிமையாகிவிடுகின்றனர்” எனத் தெரிவித்த திருத்தந்தை, ”நீதியைத் தேடுபவர், செல்வத்தை ஒரு பொதுவான நன்மையாக மாற்றுகிறார். ஆனால், ஆதிக்கத்தைத் தேடுபவர் பொது நன்மையை அவர்களின் சொந்தப் பேராசையின் இரையாக மாற்றுகிறார்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருள் சார்ந்தவற்றின் மீதான நமது பற்றுதல் நமது இதயங்களைக் குழப்பி, நமது எதிர் காலத்தைச் சிதைக்குமென இறைவார்த்தை சுட்டிக் காட்டுவதாகக் குறிப்பிட்ட திருத்தந்தை. போர்களால் மக்கள் கடுமையாக அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும், இன்று வன்முறையால் அவர்கள் நசுக்கப்படுகிறார்கள் என்றும் கவலை தெரிவித்துள்ளார்.

## நீதி என்பது ஞானம், அன்பு மற்றும் இரக்கத்தால் ஊக்குவிக்கப்படவேண்டும்

கடந்த 22ம் திகதி வத்திக்கானில் நம்பிக்கையாளர்களைச் சந்தித்த திருத்தந்தை லியோ, "நீதியும் சமூகத்தில் அதன் செயற்பாடுகளும்" எனும் தலைப்பில் தன் சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார்.

ஒவ்வொரு மனிதரின் மனசாட்சியைத் தூண்டி வழிநடத்துவதற்கும், சமூகத்தின் நேரிய மேம்பாட்டிற்கும், உன்னதமான மதிப்பீடான நீதி தவிர்க்க முடியாததாக இருக்கிறது என்றும், வரையறுக்கப்பட்ட அமைப்பு மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் ஒருவரின் மாண்பை உணரச் செய்வதுடன், மற்றவருடன் ஒன்றுபடவும், பிறருடன் சார்ந்து வாழும் சமூகக் கூறுகளை அடையாளம் காணவும் நீதி நமக்கு வழி காட்டுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

சிந்தனை மற்றும் நமது நம்பிக்கை அடிப்படையில், நாம் நமது நன்நடத்தைகளில் உறுதிபட இருக்க அடிப்படையில் ஓர் உன்னத மதிப்பிடாக நீதி இருப்பதாகக் குறிப்பிட்டார் திருத்தந்தை.

## அருட்பணி யூட் அவலின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியில் தனது குருத்துவ உருவாக்கத்தை நிறைவு செய்த தந்தை 28.05.2015இல் முன்னாள் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி தோமஸ் சவுந்திரநாயகம் ஆண்டகையால் யாழ் மரியன்னை பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். கொக்கிளாய் அமதிக்களம், ஸ்கந்தபுரம் அமதிவனம், இயக்கச்சி நேசக்கரங்கள், வவுனியா அமதியகம் ஆகியவற்றில் மக்களுக் கான ஆன்மீக சமூகப்பணிபுரிந்த அருட்தந்தை இறுதியாக இலுப்பைக்கடவையில் புதிதாக உருவாகிய அந்தோனியார் பங்கின் முதலாவது பங்கு குருவாக அரும்பணியாற்றினார். இன மத பேதமற்று அனைத்துமக்களுக்கும் அரும்பணி யாற்றிய இவ் இளம்குருவானவரின் மறைவு ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இவரின் பிரிவால் துயருற்றுள்ள அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுதலுக்காக மன்றாடுவோம்.

## இளையோர் ஏற்பாட்டில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய “ஆதிகாலத்துப் பாப்பு மார் சரித்திர சங்கிரகம்” “யாழ்ப்பாண வைபவ விமர்சனம் - தமிழரசர் உலகம்” ஆகிய இரு நூல்கள் மீள் அச்சு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன.

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களுக்கும் யாழ் திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளுக் கிடையிலான விவாத மேடை நிகழ்வும், பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை மாணவர்களுக்கும் புனித சாள்ஸ் மகா வித்தியாலய மாணவர்களுக்கிடையிலான வினாடிவினாப் போட்டியும் சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெற்றன.

இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள் பங்கு மக்கள், அயல் பங்குமக்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

## வைர விழா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மறைமாவட்டத்தின் நிதி முகாமையாளராகவும், புனித மடுத்தினார் குருமட அதிபராகவும், யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை கொமிசியத்தின் ஆன்மீகக் குருவாகவும், யாழ் மறைமாவட்ட பொதுநிலையினரின் ஆணைக்குழுவின் தலைவராகவும் நீண்ட பல ஆண்டுகள் சிறப்பான பணிகளை ஆற்றியுள்ளார். அருட்தந்தையின் நீண்ட குருத்துவ வாழ்வுக்காக நன்றி கூறுகின்றோம். தொடர்ந்தும் இறைவன் அவருக்கு வேண்டிய அருள்வரங்களைக் கொடுக்க இறைவேண்டுதல் செய்வதுடன் எம் நெஞ்சார வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றோம்.

# நம்பிக்கை பிறந்துள்ளது

கரவையூர்ச் செல்வம்

(29.06.2025 தொடர்ச்சி)

இதே தலைப்பில் எனது இரண்டாவது கட்டுரையில் நான் சில கேள்விகளை எழுப்பினேன். அதாவது, வெவ்வேறு நாடுகளில் இருந்து, வெவ்வேறு மொழி பேசுவோர், வெவ்வேறு பின்னணியில் இருந்து 133 கருதினால்கள் வத்திக்கானில் ஒன்றுகூடினார்கள். போப் பிரான்சிஸ் அவர்களுடைய அளப்பரிய சீர்திருத்தப்பணி அவருடன் சென்று விடுமா? இந்நிலையில் ஒரு புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்ய வேண்டும்.

செய்தார்கள். அதுவும் 24 மணித்தியாலங்களுக்குள். நான்காவது சுற்றில் புதிய திருத்தந்தையை தேர்ந்தெடுத்தார்கள். இது ஓர் ஆச்சரியமல்லவா? இது மனிதர்களால் முடியுமா? இது சாத்தியமாகுமா? எவ்வாறு நடந்தது?

மேலுள்ள படத்தில் ஓர் இளங்காளை குதிரைமேல் சவாரி செய்கின்றார். அவர் வேறு யாருமல்ல: எங்கள் திருத்தந்தை பதின்நான்காம் லியோ அவர்களே.

இவர் வட அமெரிக்காவின் பெரு என்ற நாட்டில் நற்செய்தி எடுத்துரைப்பவராகவும் திருவாக்கினராகவும் பணி செய்த காலத்தில் தனது மக்களைத் தேடிச் சென்ற மேய்ப்பனாக, கரடுமுரடான நிலப்பரப்பில் பயணம் செய்ய வசதியாக ஒரு குதிரையையே பயன்படுத்தினார். தனது ஆடுகளை (மக்களை) மேயாது தனது ஆடுகளின் மனங்கண்டு (smell the shep) அவர்களைத் தேடிச் சென்ற இயேசுவின் சீடனாக வாழ்ந்தவர். திருத்தந்தை பதின்னான்காம் லியோ அவர்கள். படம் பேசும் சில வேளைகளில் விரிவாகவும் ஆழமாகவும் பேசும்.

**பங்கெடுத்தோரின் கருத்துகள்**

புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் பங்கெடுத்த சில கருதினால்களை ஊடகவியலாளர் பேட்டி கண்டார்கள். தேர்தலின் விபரங்களை எடுத்துரையாது (இரகசியத் தன்மையைக் காப்பதாக உறுதி எடுத்தவர்கள்), தேர்தலின் சூழலை எடுத்துச் சொன்னார்கள்.

1) முதலாவது : போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவின் பின்னர் இரங்கற்காலத்தில் கருதினால்கள் ஒருவரையொருவர் அறிய முற்பட்டார்கள்.
2) இறுதியாக நடந்தேறிய ஆயர் மாமன்றத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முயற்சித்தனர்.

3) கடைசி இரண்டு - மூன்று ஆண்டுகளுக்குள் முக்கிய பதங்களுக்கு நியமனம் பெற்று வத்திக்கான் வந்த கர்தினால்கள் யார்? இவர்கள் எவ்வாறு தங்கள் பொறுப்புக்களைச் செய்தார்கள்? போப் பிரான்சிஸ் இவர்களைத் தெரிவு செய்தது ஏன்? இவர்களது பின்னணி என்ன?

4) போப் பிரான்சிஸ் அவர்கள் எடுத்த முயற்சிகளைத் தொடர்வார்களா? அதேவேளை போப் பிரான்சிஸ் அவர்களுடைய "போட்டோ கொப்பியாக" மாறாமல் இருப்பார்களா?

**ஒரே மேடையில்**

வடஅமெரிக்கக் கருதினால்களை ஒரே மேடையில் இருத்தி ஊடகவியலாளர்களும் சில இறையியலார்களும் பல்வேறு கோணங்களில் கேள்விகள் கேட்டார்கள். அவர்களுடைய பதில்களின் சுருக்கம்:



குட்டையில் மீன்பிடிக்க முயலுகிறார்கள். ஆனால் பெரும்பாலும் இவர்கள் மீன்பிடிப்பதில்லை: கருவாடுதான் பிடிக்கிறார்கள். கருவாடென்ற சொல்லை உருவகத்தில் சொல்லியுள்ளேன். தெரிவு செய்யப்படுவோரின் ஆளுமையைக் குறிப்பதாகும்.

சில மறைமாவட்டங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆட்சி செய்யும் (பெரும்பாலும் ஆட்சிதான்) ஆயர் 75 அகவையை எட்டப்போகிறாரென்றதும், தொடங்கிவிடும் அடுத்த ஆயருக்குரிய போட்டிகள், சாதி விளையாட்டுக்கள், பிரதேச பேச்சுக்கள் சிலவேளைகளில் பகிரங்கமாகவே இவற்றைச் செய்கிறார்கள். இவையெல்லாம் பணித்தலைமைத்துவம் சேவைத் தலைமைத்துவம் பேசிய இயேசுவிற்கு எதிர்சாட்சி பகிர்வதாகும். இப்படிப்பட்ட சூழல்களில், தூய ஆவிக்கு இடமெதுவுமில்லை. நடந்தேறிய புதிய திருத்தந்தையைத் தெரிவு செய்ய என்ன மனநிலையில், கருதினார்கள் மூடிய அறைக்குள் சென்றார்களோ அதே மனோ நிலையில் துறவறத்தோர் எங்கள் முதல்வர்களைத் தெரிவு செய்ய முயன்றால் தூய ஆவி வழிநடத்தும். எங்கே இருவரோ மூவரோ (அல்லது பலரோ) எனது பெயரில் (மனித அரசியல் அல்ல) அதாவது எனக்குத் திறந்த மனம் கொண்டோராய் இருப்பார்களானால் சுய நலன்களை நீக்கிப் பொது நலன் கருதி வருவார்களானால் அங்கு நானிருப்பேன். தூய ஆவி இருப்பார்.

**இதுவல்ல முதல்**

நடந்து முடிந்த திருத் தந்தையின் தேர்தல் விரைவில் முடிந்தது என்று நான் சொல்லும் பொழுது, ஏதோ இத் தேர்தல்தான் முதன்முதலாக இவ்வாறுநடைபெற் றது என்பது வரலாறல்ல. 1503ம் ஆண்டில் இரண்டாவது லியோ 10 மணித்தியாலங்களுக்குள் தெரிவு செய்யப்பட்டார். 1939ம் ஆண்டு பன்னிரண்டாம் பயஸ் மூன்றுசுற்றுக்களில் தெரிவு செய்யப்பட்டார். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் போப் பிரான்சிஸ் ஐந்து சுற்றுக்களில் தெரிவானார். 1978ம் ஆண்டு முதலாவது ஜோன்போல் மூன்று சுற்றுக்களில் தெரிவானார்.

இவற்றிற்கு மாறாக பதினோராம் பயஸ் 1922 இல் ஐந்து நாட்களின் பின்னரேயே 14வது சுற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டார். பத்தாம் கிறெகறி 1274 இல் இருவருடங்கள் ஒன்பது மாதங்கள் இரு நாட்களிலேயே தெரிவு செய்யப்பட்டார். இதைக் கேள்வியுறும்பொழுது என்ன நடந்தது என்று தான் எல்லோரும் கேட்டார்கள். எனது கேள்வியும் அதுவே. இப்படியொரு பிரசவ வேதனையா? தூய ஆவி ஒரு நீண்ட விடுதலையில் போய் விட்டாரா? அந்த ஆய்வுக்குச் செல்லவேண்டிய அவசியம் இக்கட்டுரைக்குத் தேவையில்லை.

"நாம் ஒரு நாட்டினரைத் தேடவில்லை. ஒரு குறிப்பிட்ட மொழி பேசுபவரைத் தேட வில்லை. ஒரு கலாசாரத்தைத் தேட வில்லை. மாறாக, இந்தக் காலகட்டத்தில் உலகில் பிரிவினைகள் வளர்ந்து வரும் பின்னணியில், மேற்குலகில் கத்தோலிக்கம் தேய்ந்து வரும் சூழலில் மனித மாண்புகள் அழிந்து வரும் நேரத்தில், கத்தோலிக்கத்தினுள் ஒரு பிளவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளக்கூடிய உலகத் தலைவராக, ஒரு திருத்தந்தை தோன்றுவாரா? இவற்றை வைத்து நான் எழுத முனைகிறேன். அவ்வாறு அவர்கள் சொல்லாவிடினும் அடுத்த திருத்தந்தை ஒரு துறவற சபையில் இருந்து வரவேண்டுமென்றோ அன்றேல் மறைமாவட்டப் பின்னணி கொண்டவராக இருக்க வேண்டுமென்றோ நாம் தேடவில்லை.

ஒரு கட்டத்தில் இவர்கள் ஏகோபித்த குரலில் சொன்னார்கள் "எம்முன் ஒரு சக்தி (spirt holy sprit) எங்களை வழிநடத்தியதை நாம் உணர்ந்தோம். இங்கு அரசியல் இருக்கவில்லை" சுப்பர்!

**தூய ஆவி**

நான் ஒரு கிறித்தவனாக வளர்ந்த காலத்தில், எனது குருத்துவத் தொடக்க காலத்திலும் ஆயர் தெரிவு, துறவற சபைகளின் முதல்வர் தெரிவு, திருத்தந்தையின் தெரிவு போன்ற நிகழ்வுகளில் தூய ஆவி தெரிவு செய்வோரை வழிநடத்துவார் என்று நம்பினேன். குருத்துவத்தில் வளர வளர மாகாணத் தேர்தல்களிலும், அனைத்துலக ரீதியான துறவற சபை முதல்வர் தேர்தல்களிலும் நேரடியாகப் பங்கு கொண்ட அனுபவத்தினால் இந்தத் தேர்தல்களுக்கும் தூய ஆவிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்ற ஒரு முடிவுக்கு வந்தேன். இதை ஆதாரங்களுடன் நிரூபிக்க என்னால் முடியும். ஆயினும், இந்த முறை திருத்தந்தையின் தேர்தலில் என்னவோ நடந்துள்ளது. கொஞ்சம் தேடினேன்.

எப்படிப்பட்ட மனநிலையுடன் கருதினால்கள் இத்தேர்தலில் பங்கு கொண்டார் களென்று புரிகிறது. திறந்த மனதுடன் தேர்தலை அணுகியுள்ளார்கள் என்பது ஓரளவு தெளிவு. பொதுநலன் கருதிப் புதிய தலைவரைத் தேடியிருக்கிறார்களெனப் பேட்டிகளில் தெரிகிறது. இப்படிப்பட்ட சூழலில் ஒரு குழுமம் (அது பெரிதாக இருப்பினும்) ஓர் உய்த்துணர்வில் (Discerned ) ஈடுபடும்பொழுது, எமக்கு மேலான எம்முன் இருக்கும் ஒரு சக்தி வழிகாட்டுமென்று எனது உய்த்துணர்வு அனுபவம் சொல்லுகின்றது. நடந்தேறிய திருத்தந்தை - தேர்தல் ஓர் ஆரோக்கியமானதாகத் தோன்றுகிறது.

**ஆழ்மௌனம்**

ஆழ்மௌனம் பேசும். ஆழ்மௌனம் திசைகாட்டும். இதை எழுதியவர் எக்காட் ரொங். இதை ஓரளவு சிறிதளவு அனுபவித்தவர் செல்வம். ஆகவே எனக்கு இதில் நம்பிக்கையுண்டு. இது, ஞானிகளின் அனுபவம். துறவற சபைகளில் குருத்துவக் கல்லூரிகளில் மறைமாவட்டங்களில் இதை நன்கே உணர்த்த வேண்டும். இது எதிர்காலத்துக்கு அவசியம்.

**எனது ஊகம்**

முதல் சுற்றில், மூன்று - நான்கு கருதினால்களின் பெயர்கள் முன்னுக்கு வந்திருக்கும். இரண்டாவது சுற்றில் இரண்டு அல்லது மூன்று பெயர்கள் முன்னிலையில் ஒரு பாரிய இடைவெளியில் தோன்றியிருக்கும். மூன்றாவது சுற்றில் தெளிவு. நான்காவது சுற்றில் தெரிவு புதுமையேதுமில்லை.

**சில தேர்தல்கள்**

எங்களுடைய துறவற சபைகள் சிலவற்றில் சபையின் முதல்வரையோ அன்றேல் மாகாண முதல்வரையோ தெரிவு செய்யும் பொழுது இந்தத் துறவிகள் எவ்வளவு கீழிறங்கி கேவலங்கெட்ட அரசியல் விளையாட்டுக்களை விளையாடுகிறார்கள்? இது போதாதென்று, இத்தனையையும் இயேசுவின் பெயரால் செய்கிறார்கள்! பதவிக்குப் போட்டிபோடும் துறவிகள், சாதியென்றும், பிரதேசமென்றும், "எனது ஆள்" என்றும் சபைகளைப் பிரிக்கிறார்கள். மாகாணங்களைப் பிளவு படுத்துகிறார்கள். குட்டையைக் குழப்பி, குழப்பிய

**ஆங்கில உரை**

"அனைத்துலகிற்கும்" என்று வழங்கிய உரையை பதினான்காம் லியோ முழுக்க முழுக்க ஆங்கிலத்திலே நிகழ்த்தினார். தனது தாய்மொழி ஆங்கிலம் என்ற காரணத்தினால் அல்ல, மாறாக இன்று ஆங்கிலம் ஓர் உலக மொழியாக உள்ளது. எதிர்பார்த்தது போல ஆங்கிலம் பேசும் மக்கள் - உலகளாவிய இம்மக்கள் இவ்வுரையை நேரடியாகவே கேட்டார்கள். கத்தோலிக்கர் அல்லாத மக்களும் கேட்டார்கள். கேட்ட மக்கள் ஆரவாரத்தோடு மகிழ்ச்சியோடு திருத்தந்தையைப் பாராட்டி தங்கள் மொழியில் அவர் நிகழ்த்திய உரையை வரவேற்றார்கள்.

இதை வரவேற்காதவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஒரு செத்த மொழியான இலத்தீன்

(7ம் பக். தொடர்ச்சி...)

# கூத்துக்கலையை ஆன்மீகத்தோடு நேசித்த
## அண்ணாவியார் கலாபூஷணம் மனோகரன்

போயிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப் பாணம் குருநகரினை வதிவிடமாகவும் கொண்ட அண்ணாவியார் அ. மனோகரன் (மரியதாஸ்) அவர்கள் 01.09.2025 அன்று இறைபதமடைந்தார். இவர் பிரபல்யமான அண்ணாவியார் மட்டுமன்றி ஈழத்தின் தென்மோடிக் கூத்துமரபின் மூத்த ஆளுமையாகவும் திகழ்ந்தவர். அது மட்டுமன்றி திருவுளப்பணியாளர் சபையின் இலங்கையின் மாவட்ட முதல்வர் அருட்திரு கொட்வின் கமிலஸ் (சணா) அவர்களின் தந்தையாருமாவார். அவரது இழப்பின் வெளியில் அவரது கலைசார் முக்கியத்துவங்களை இக்கட்டுரை முன்வைக்கின்றது.



### கூத்துக்கலைப் பரம்பரையின் வாரிசு

அண்ணாவியார் அ.மனோகரன் (மரிய-தாஸ்) அவர்கள் போயிட்டியைப் பிறபிடமாகக் கொண்டவர்.இளவாலை போயிட்டிக் கிராமம் தென் மோடிக் கூத்துக் கலையை அதிகம் நேசித்துப் பேணி வந்த கிராமம். அக்கிராமத்தின் கூத்துப் பரம்பரை யிலேயே மனோகரன் அண்ணாவியார் அவர்கள் 06.09.1941 அன்று பிறந்தார். அவரது தந்தையார் பெயர் அறுக்காஞ்சிப்பிள்ளை, தாயார் பெயர் வில்வீனம்மா. நீண்ட கூத்துப் பரம்பரையின் வாரிசாகப் பிறந்த இவர் பாலப்பருவத்தில் இருந்தே கூத்துச் சூழலுக்குள் வளர்ந்தவர். இவரது பேரனார் சூசைமுத்து அந்தோனிப்பிள்ளை போயிட்டியின் புகழ் பெற்ற அண்ணாவியார், சிறிய தந்தையார் அண் ணாவியார் இராசாத்தம்பி. இவர் மிகவும் பிரபல்யம் மிக்க கலைஞன். கூத்துக் கலையின் கொடுமுடி யாகக் கொள்ளப்பட்ட அமரர் பூந்தான் யோசேப்பு வின் பல கூத்துக்களில் பிரதான பாத்திரமேற்று நடித்தவர். அவரது சகோதரர்களான சிங்கராஜா, தேவசகாயம்பிள்ளை போன்றவர்களும் சிறந்த கூத்-தர்களாகத் திகழ்ந்தார்கள். இவரது தாய் மாமனாரா-கிய 'கூத்துக்கலைத் திரவியம்' என அழைக்கப்பெற்ற அண்ணாவியார் திரு அந்தோனிப்பிள்ளை அவர்கள் சிறந்த கூத்தாளி மட்டுமன்றி ஆசிரியராக அதிபராக இருந்து ஓய்வுபெற்றவர். பல கூத்துக்களை எழுதி பாட சாலைகளிலும் புலம் பெயர்ந்த தேசமாகிய கனடா விலும் மேடையேற்றியவர். இவரது மாமனாரின் மகள் வண்ணமணி என அழைக்கப்படும் திருமதி மேரி கொண்சாய்க் அந்தோனிப்பிள்ளை, ஆனைக் கோட்டையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெண் அண்ணாவியார். இவரது இளைய சகோதரன் அன்ரன் பீலிக்ஸ் அவர்களும் கூத்து இசை நடிப்பு எனப் பல்துறைகளிலும் பிரபல்யம் பெற்றவர் தற் போதும் கனடாவில் கலை படைத்துக் கொண்டிருப் பவர். எனவே ஒரு பெரிய கலைப் பாரம்பரியத்தில் தோன்றிய மனோகரன் அவர்கள் தன் வாழ்நாளி லும் கூத்துக்கலையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி மறைந்துள்ளார்.

### கலைப் பிரவேசம்

புலவர் அடைக்கலமுத்து(அமுது) அவர்கள் எழுதிய வெண்பா ஒன்றினைத் தனது ஒன்பதாவது வயதிலே பாடசாலையில் பாடிப் பலரது பாராட்டுக்களை யும் பெற்றதில் இருந்து அவரது கலைப்பிரவேசம் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பல பாடசாலை நாடகங்களிலும் நடிக்கத் தொடங்கினார். குறிப்பாக வரலாற்று நாடகமொன்றில் எல்லாளன் பாத்திர மேற்று நடித்துப் பாராட்டப் பெற்றார். 16வயதில் போயிட்டிப் பிரதேசத்தின் பிரபலமான கூத்தாகிய 'கற்பலங்காரன்' நாட்டுக் கூத்திலே தேவதூதன் பாத்திரமாகவும் தோழி பாத்திரமாகவும் தோன்றி நடித்தார். அதனைத் தொடர்ந்து அவரது சிறிய தந்தையார் இராசாத்தம்பி அவர்கள் நெறிப்படுத்திய பல கூத்துக்களில் பெண் பாத்திரமேற்று நடித்ததுடன் சிறிய தந்தையாரின் கூத்து உருவாக்கங்களுக்குப் பிற்பாட்டுப் பாடுதல், கைத்தாளம் போடுதல் போன்ற பணிகளினூடாகக் கூத்து மரபின் நுட்பங்களைச் சிறப்பாகக் கற்றுக் கொண்டார். அதன் பயனாகப் பிரபலம் மிக்க பல அண்ணாவிமார்களுக்கு ஈடுகொ-டுத்து முழு இரவுக் கூத்துக்களில் நடிக்கத் தொடங்கினார். அவர் நடித்த கூத்துக்கள் சில வரு மாறு எஸ்தாக்கியர் நாட்டுக்கூத்தில், மூத்த மகனாக வும், நொண்டி நாடகத்தில் செட்டிப்பெண்ணாகவும், விஜயமனோகரன் நாடகத்தில் மனோகரி பாத்திர-மாக வும், சிலை எடுத்த சேரனில் மந்திரியாகவும், கண்டி அரசனில் குமாரி காமியாகவும், வீரமாதேவி கூத்தில் வீரமாதேவியாகவும், நந்திவர்மன் கூத்தில் நந்தி வர்மனாவும், சங்கிலியன் கூத்தில் சங்கியலிய னின் மகனாகவும், தேவசகாயம்பிள்ளைக் கூத்திலே மந்திரியாகவும், கருங்குயில் குன்றத்துக் கொலை கூத்திலே அரசியாக வும், பண்டார வன்னியனில் மந்திரி யாகவும் என ஐம்பதுக்கும் மேற்பட்ட கூத்துக் களில் பெண் பாத்திரங்களையும், நாடககாரன் பாத்தி ரங்கள் மற்றும் குணச்சித்திரப் பாத்திரங்களை யும் அதிகம் ஏற்று நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றார். இக்கூத்துக்களையெல்லாம் அவரது சொந்த இடமாகிய இளவாலை போயிட்டியில் மட்டுமன்றி புல்லாவெளி, சேந்தாங்குளம், முல்லைத்தீவு, ஊறணி, கிளிநொச்சி குருநகர், கொய்யாத்தோட்டம், பாசையூர் போன்ற பல கிராமங்களில் நிகழ்த்தினார். இவர் தனது சிறிய தந்தையாராகிய இராசாத்தம்பி அவர்களின் நெறியாள்கையில் அதிக கூத்துக்களை நடித்திருந்தாலும் அண்ணாவியார் பூந்தான் யோசேப் புவின் எஸ்தாக்கியார் சங்கிலியன், கருங்குயில் குன் றத்துக் கொலை போன்ற பல கூத்துக்களில் நடித்து அவரது அபிமானத்தினைப் பெற்றார். அக் காலத்தில் இலங்கை வானொலியில் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப் பப்பட்ட பூந்தான் யோசேப்புவின் பல கூத்துக்களிலும் தனது குரல்வளத்தினை வழங்கினார். இத்தகைய அனுபவங்களினால் கூத்துக்கலையின் ஜாம்பவான் களாக அக்காலத்தில் விளங்கிய அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, வின்சன் டி போல், பெலிக்கான், பேக் மன் ஜெயராஜா, சாமிநாதர், மலாக் கியாஸ்நாதன், அ.பாலதாஸ், ஆரம் மாஸ்டர், வ.அல்பிரட் கிறிஸ்தோப்பர், யேசுராசா.. என்ற பல பிரபலங்களுடன் சரிக்குச் சமமாக நின்று நடித்து பெயரீட்டினார்

### அண்ணாவியாக

தென்மோடி கூத்துமரபில் அண்ணாவி என்ற நிலையை அடைபவர்கள் பல கூத்துக்களில் நடித்தும், தாளப்பிரயோகம் செய்தும், கூத்தின் நுட்பங்களை நன்கு கண்டறிந்ததன் பின்னர் கூத்தினைப் பயிற்று விக்கக்கூடிய நிலையை எய்தியவர்கள். அவர்களின் சமூகத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் சூழலிலேயே அண்ணாவியாராக மதிக்கப்படுவார்கள். மனோகரன் அவர்களை கூத்துக்களைப் பயிற்றுவிக்கத் தூண்டிய-



வரும் இவர்களின் பரம்பரையில் அண்ணாவியாராக சிறந்து விளங்கிய இராசாத்தம்பி அவர்களே. அக்கா லத்தில் சில பாடசாலைகளில் கூத்துக்களைப் பயிற்று விப்பதற்கு அவரே இவரைத் தூண்டினார். அவரது ஆசீருடன் அண்ணாவியாராகப் பாடசாலைகளிலும் சில பங்குத் தளங்களிலும் எழுபதுகளில் இருந்தே கூத்துக்களை நெறிப்படுத்தத் தொடங்கினார், இராசாத் தம்பி அவர்கள் இந்தியாவுக்கு சென்ற காலத்தில் அவரது கிராமமே இவரை அணுகிக் கூத்துக்களை பயிற்று விக்கத் தூண்டியபோது பல கூத்துக்களை நெறிப்படுத்தினார். சகோதர பாசம் (1971,1974 இள வாலை), திருப்பம் (1972 குருநகர), விஜயமனோ-கரன் (1980,பலாலி,2006மிருசுவில்), வரதமனோ கரி (1983,மாத்தளன்) நந்தி வர்மன் (1986 போயிட்டி, 1994 குருநகர்), மனந்திரும்பிய மைந்தன், (1989 போயிட்டி) சிலையெடுத்த சேரன் (1993 குருநகர்), உத்தரியத்தின் மகிமை (1994 குருநகர), சங்கிலியன் (2000,இளவாலை,2008 அச்செழு, 2011 மருதானை) போன்ற பல கூத்துக்கள் இவரால் நெறிப்படுத்தப்பட்டவை

இதனை விட சில கூத்துக்களை எழுதியும் தொகுத்தும் நெறிப்படுத்தினார் அவற்றில் திருப்பம் (சமூகக்கூத்து), சிலைஎடுத்த சேரன் (வரலாறு), உத்-தரியத்தின் மகிமை (கிறிஸ்தவக்கூத்து), மனந் திரும்பிய மைந்தன், (கிறிஸ்தவ கூத்து) சகோதர பாசம், (சமூகக்கூத்து) வணங்கா மண் (விடுதலைப் போராட்டவரலாறு) போன்ற கூத்துக்களைக் குறிப்பிடலாம்.

அண்ணாவியார் மனோகரன் அவர்களது சிறப்பிற்குக் காரணமாக அவரது குரல் வளம் காணப் படுகின்றது. உச்ச சாரியத்துடன் சோக இராகங் களை எல்லோரும் பாடமுடியாது. அத்தகைய குரல் வளம் மிக்கவர்களே 'நாடகக்காரன்' பாத்திரங்களை ஏற்பார்கள் மனோகரன் அண்ணாவியாரின் தனித் துவங்களில் அவர் பெண் பாத்திரங்கள், நாட கக் காரன் பாத்திரங்கள் மட்டுமன்றி ஆண் பாத்திரங் களையும் பாடவல்லவராகத் திகழ்ந்தார் அத்தகைய சிறப்புக் கூத்தர்கள் மத்தியில் இவருக்கு அதிக மதிப்பினைப் பெற்றுக்கொடுத்தது.

**காவலூர் யோவான்**

### திருமறைக் கலாமன்றத்தில்

திருமறைக் கலாமன்ற ஸ்தாபக இயக்கு நர் அருட்தந்தை மரியசேவியர் அடிகளின் மேல் சிறிய வயதில் இருந்தே ஆழ்ந்த அன்பு கொண்டிருந்த இவர். தொண்ணூறுகளில் இடம்பெயர்ந்து குடும்பமாக யாழ்ப்பாணத்தில் வசித்த காலத்தில், மரியசேவியர் அடிகளின் வேண்டுகோளுக்கிணங்க திருமறைக் கலாமன்றத்தின் நாட்டுக்கூத்துப் பிரிவில் தன்னை இணைத்துக் கொண்டு அதன் பொறுப் பாளர்களாக இருந்த அண்ணாவிமார்களான அ.பாலதாஸ் அ. பேக்மன் ஜெயராஜா அவர்களுடன் இணைந்து கொண்டு தன்னால் இயன்ற பங்களிப் பினைப் புரிந்தார்.1993 ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் நடத்திய நாட்டுக் கூத்துவிழாவில் மன்றத்தினால் கௌரவம் பெற்ற மூத்த அண்ணா விமார்களில் இவரும் ஒருவர். என்பது குறிப்பிடத்-தக்கது. திருமறைக் கலாமன்றத்தில் எஸ்தாக்கியார் நாட்டுக்கூத்து தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்துப் போன்றவற்றில் நடித்தது மட்டுமன்றி, அக்காலத்தில் மன்றத்தின் நாட்டுகூத்துப் பிரிவினால் நடத்தப் பட்ட கூத்துப் போட்டிகளில் நடுவராகவும், நாடகப் பயிலக மாணவர்களுக்குக் கூத்து ஆசிரிய ராகவும், கருத்தமர்வுகளில் வளவாளராகவும் பங்கு கொண டார். இறக்கும்வரை மன்றத்தின் அபிமானியாக மன்றத்திற்கு விசுவாசமான கலைஞனாக சேவை யாற்றினார்.

### வியாகுலத்தருக்களின் இசைஞன்

கூத்துக்களில் மட்டுமன்றி கிறிஸ்தவ மக்களின் பாஸ்கா வழிபாட்டுக் காலங்களில் பாடப்படுகின்ற பசாம் - வியாகுல பிரசங்கம், அதனைத் தொடர்ந்தும், மரணவீடுகளிலும் பாடப்படுகின்ற 'துக்க இராகங்கள்' எனப்படும் 'பேரின் பக்காதல்,' 'சிந்தாகுலத்திரட்டு' போன்ற வியாகுலத் தருக்களை துக்க ஓசையுடனும், சொற்தெளிவுடனும் உயர்ந்த குரல் எடுத்து மிகவும் சிறப்பாக பாடவல்லவர். உச்சஸ்தாயியில் அவர் சோகம் சொட்டப்பாடும் பாடல்கள் கேட்பவர் கண் களைக் குளமாக்கும். அப்பாடல்கள் 'குருதியின் இராகம்' என்ற பெயரில் இறுவட்டாகவும் அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. யாழ் மறைமாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட பல பசாம் பாடல் போட்டிகளுக்கு இவர் இளையவர்களைப் பயிற்று வித்ததுடன், போட்டிக-ளில் நடுவராகவும் கலந்து கொண்டு பசாம் பாடல் களின் சந்ததிக் கையளிப்பிற் கும் பெரிதும் உதவியுள்ளார்


### கிடைக்கப் பெற்ற கௌரவங்கள்

விருதுகளைத் தேடிச் செல்லாத அண்ணா வியார் அவர்களை பல விருதுகள் தேடிவந்தன. 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வீரசிங்கம்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# கருணை உன் வடிவல்லவா!

குழந்தைகள் உணர்வுகளைக் கற்கும் பாடசாலை அதுதான். தாயின் கண்கள்தான் குழந்தை உலக மனிதர்களைப் படிக்கும் புத்தகம்.



அருட்பணி சுரேஸ்ராஜ்

இறைவனால் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காகத்தான் அன்னையரைப் படைத்தார்" என்பது சீனப் பழமொழி. அன்னையர்களின் தன்னலமற்ற அன்பு. பராமரிப்பு, தியாகம் ஆகியவற்றை உணர்த்தவே இவ்வாறு சொல்வதாகப் புரிந்து, இச்சொற்றொடரின் பின்புலம் அறியும் எவரும் தாயன்பைக் கட்டாயம் கொண்டாடுவர்.

இறைவனைத் தந்தையாகவே புரிந்து போதித்த கிறித்தவமும் இன்று அன்னையாகவும் தந்தையாகவும் கடவுளை ஏற்று, "இறைத் தந்தாய்" (தந்தை + தாய்) என்று கொண்டாடுகின்றது. நாம் இந்த உல கத்திற்கு வரவும் வாழவும் நம் தந்தை மற்றும் தாயிடம் பொறுப்பினைக் கடவுள் பகிர்ந்து தந்திருக்கிறார். ஈரைந்து மாதங்கள் தாய் குழந்தையைக் கருவில் சுமப்பார் தந்தை அவரையும் சேர்த்து உயிருள்ளவரை இருவரையும் மனத்தில் சுமப்பார் என்பதுதான் உண்மை. இந்த மாதம் நாம் இறையன் னையின் புகழ்பாட வாய்ப்புப் பெற்ற மாதம். ஆதலால், நம் அன்னையைப் பற்றியும், அன்னை யாக நம்மைப் பற்றியும் சிறிது உளவியல் சார்ந்து சிந்திப்போம்.

ஒரு மனிதனின் உடல், உள, ஆன்மீக நலனுக்கு யார் பொறுப்பு என்று பார்ப்பதற்குப் பதிலாக, இயற்கையாக இறைவன் எப்படி அதற்கு வகை செய்திருக்கிறார் என்று கேட்பது நலம் பயக்கும். பெற்றோரை ஆதாரமாகவும், சமூகம் முழுமை யையும் அடித்தளமாகவும் வைத்துப் பின்னப்பட்ட தேவைகளின் தொடக்கம், குழந்தை கரு உருவாவதற்கு ஒன்பது மாதங்களுக்கு முன்பாகவே ஆரம்பிக்கின்றது என்று அறிந்தபோது ஆச்சரியம் அடையாமல் இருக்க முடியவில்லை.

பொதுவாக, 280 நாட்கள் அல்லது ஏறக்குறைய 40 வாரங்கள் நாம் நமது தாயின் கருவறையில் குடிகொள்கிறோம். முழுமையாக 9 முதல் 10 மாதங்களாகவும் அல்லது சில காரணங்களினால் மாறும் இந்த நாள்கள் மிக மிக முக்கியமான அடித்தள நாட்களாக அமைகின்றன. ஆம், உயிர் உருவாக 9 மாதங்களுக்கு முன்பாகப் பெற்றோரின் வழியாக ஏற்படும் உளவியல் தாக்கம் இந்த நாட்களில் இன்னும் வலமையானதாகின்றது. மூளை முழு வளர்ச்சியடைய காலம் எடுத்துக் கொண்டாலும், அது தன் தாயின் வயிற்றிலிருந்தவாறே தன்னைச்சுற்றி நடப்பவற்றைக் கவனிக்கின்றது.

ஆக, அவை நல்லவைகளாக இருந்தால் பின்னாள்களில் நேர் மறையான தாக்கத்தினையும், தீயவையாக இருந்தால் எதிர்மறையான தாக்கத்தினையும் ஏற்படுத்துகின்றது. கரு அனைத்தையும் துரிதமாகக் கற்கும் திறன் படைத்தது என்று உளவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த நாட்களில் தன்னைச்சுற்றி நடக்கும் அனைத்தையும் கரு கூர்ந்து கவனிக்கின்றது. எனவே, தாயின் நாள்களில் தாயின் மகிழ்ச்சி கருவின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்று.

அடுத்து, மிகவும் முக்கியமானது நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக்கொள்ளுதல், தான் கருவுற்றிருப்பதை அறியும் தாயும், அவர் வழியாக அவ்வுயிரினைப் பற்றி அறியும் அவரது தந்தையும், அவர்கள் வழியாக அச்செய்தியினை அறிந்துகொள்ளும் குடும்பமும் சமூகமும் அந்தக் குழந்தையின் வரவை மகிழ்வோடு ஏற்கவேண்டும். இதில் ஏற்படும் பிழை பின்னாள்களில் (சமூக வெறுப்பு சுயவெறுப்பாக மாறி) தற்கொலை எண்ணமாகக்கூட வாய்ப்புள்ளது.

அடுத்தது நிரப்பந்தக் கோளாறு. பிறக்கப்போகும் குழந்தை ஆணா? பெண்ணா? என்று அறிய தாமாக ஆசைப் படுதலாகும். கரு உருவாகும்போதே இது நிர்ணயிக்கப்படுகின்றது என்பதை அறிந்தவர்களும் கூட இதில் பிழை செய்கிறார்கள். தன்னைத் தன் பாலினமாகப் பாவிக்காமல், இவர்கள் பிறந்த பின் குணத்தாலும் செயல்களாலும் மாறிய ஒரு வாழ்க்கையைப் பிரதிபலித்து, பெரும்பாலும் சமூக நகைப்பிற்கு உள்ளாகிறார்கள். சுய வெறுப்பு, வெறுமையுணர்வு, சமூக விரோத நடத்தை, கைவிடப்பட்ட எண்ணம் போன்றவற்றின் விதைகள் இந்தக் காலத் தில்தான் உருவாகின்றன. தாயும் அவர் சார்ந்த சமூகமும் கொண்டுள்ள நல்ல நேர்மறையான நம்பிக்கைகளும், தாய்க்கும் அதன் கருவுக்கும் கொடுக்கப்படும் நல்ல அன்பும் செபங்களும் குழந்தையின் எதிர்கால உளவியல் வாழ்க்கைக்கு நல்ல தூண்டல்களாகும்.

குழந்தை பிறந்த முதல் ஒன்பது மாதங்களை உளவியலாளர்கள் தாயோடு உடல் சார்ந்த பிணைப்பு நாட்களாகக் கணிக்கிறார்கள். "மனோ பகுப்பாய்வுக் கோட்பாட்டின் தந்தை" என்றழைக்கப் படும் சிக்மண்ட் ஃபிராய்டு இந்நாட்களை "சிம்பயாடிக் யூனியன்" அதாவது "சகவாழ்வு நாட்கள்" என்கிறார். அதாவது, குழந்தை தன் தாயிலிருந்து வேறுபட்டவர் என்பதை இன்னும் உணரவில்லை. தாய் தன் உடலின் ஓர் உறுப்பு என்றே எண்ணிக் கொண்டிருக்கின்றது. இந்த நாள்களில்தான் தாயின் உடனிருப்பு ஒரு குழந்தைக்குத் தேவை.

பொதுவாகவே, தாய் தன் குழந்தையின் கண்களைக் கூர்ந்து பார்ப்பது மிகவும் சிறப்பானது. காரணம், குழந்தைகள் உணர்வுகளைக் கற்கும் பாடசாலை அது தான். தாயின் கண்கள்தான் குழந்தை உலக மனிதர்களைப் படிக்கும் புத்தகம். குழந்தையின் கண்களும் தாயின் கண்களும் பார்க்கும்போது இருவரின் இதயமும் ஆக்சிடோசின் என்ற சுரப்பி மூலம் இணைகின்றன. குழந்தை தன் தாயின் பிரமிப்பினை உணரவேண்டியது அவசியம். இந்த ஆக்சிடோசின் செய்யும் வேலை என்ன தெரியுமா? எத்தனை பெண்கள் இருந்தாலும், "என் தாய்தான் அழகானவள்" என்ற உணர்வைக் குழந்தைக்கும். எத்தனை குழந்தைகளிலும் "என் குழந்தை தான் அழகானது" என்ற எண்ணத்தைத் தாய்க்கும் தருகின்றது.

இப்படித் தாயின் உடனிருப்பில் குழந்தை வளர வாய்ப்பின்றி குழந்தைப்பருவத்தேவைகள் மறுக்கப்பட்டதென்றால், தாயின்றி அழுத அனுபவங்கள் பின்னாள்களில் அவர்களை யாரையும் நம்ப விடுவதில்லை. தகுந்த நேரங்களில் தாயின் கண்களைக் காணாததால், மற்றவர்களின் உணர்வுகளை இவர்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. தேவையில்லாமல் கோபமடைவதும் சண்டையிடுவதும் இவர்களின் பொதுவான குணங்களாகின்றன. குற்றச் செயல் புரிவதும், "எனக்கென்று யாருமில்லை" என்று உணர்வதும் இவர்களின் பிரதானமாகிறது.

உடல் சார்ந்த உடனிருப்பு ஒன்பது மாதமென்றாலும், உணர்வு சார்ந்த உடனிருப்பு முதல் ஏழு ஆண்டுகள் என்றும் சில உள வியலாளர்கள் கூறுகின்றனர். இந்த ஏழு ஆண்டுகளில் தன் தாய் பார்த்து உறங்கவேண்டும், எழுந்தவுடன் தன் தாய் வேண்டும் என்று குழைந்தைகள் ஆசைப்படுகிறார்கள். அழுதாலும் சிரித்தாலும் அவர்கள் அறியப்படுத்த விரும்பும் முதல் நபர் தாய்தான். பரந்தவெளியில் வேகமாக ஓடும் குழந்தை நின்றவுடன் திரும்பித்தேடிப் பார்ப்பது தன் தாயைத் தான். அவர்களின் உணர்வுத் தேடல் வெற்றியடையவில்லை என்றால், அது அதிக பய உணர்வைக் குழந்தைக்குள் உண்டாக்குகின்றது. ஏழு ஆண்டுகள் என்று சொன் னாலும், அண்மைக் காலத்தில் சில உளவியலாளர்கள் தாய் - சேய்க்கான இந்த உணர்வுப் பிணைப்பு இறுதிமூச்சு வரையும் நீடிக்கிறது என்றும் கூறுகிறார்கள்.

உலகத் தாய்மார்களுக்கே இப்படியென்றால், உலகத்தினைப் படைத்த உன்னதரின் தாயாம் நம் அன்னை மரியாவுக்கு எவ்வளவு மகத்துவம் கொடுக்கப்பட வேண்டும்! மாபரனை உலகிற்குக் கொண்டுவரும் கருவியாக மட்டும் நாம் அவரைக் குறுக்கிவிட முடியுமா? சிலுவையில் செந்நீர் சிந்தும்போதும், "மக்களின் மீட்பே என் தியாக வாழ்வின் இலக்கு" என்று அமைதி காக்க வைத்தது நம் அன்னை கூறிய அல்லது வாழ்ந்த தியாகப் பாடத்தின் விளைவல்லவா!

மகத்துவமாய் பிறந்தாரென்று மகிழ்ந்த நேரத்தில், வாளொன்று உன் இதயத்தைத் தாக்குமென்று குழந்தையான இயேசுவைக் கையில் வைத்திருந்த போது அறிந்த இந்த அன்னையின் மனம் உயிரற்ற அன்பு மகனைச் சிலுவையின் நிழலில் தாங்கிச் சந்தித்த வேதனைகளைத் தன் மகனுக்கும் மற்றவருக்கும் கடத்தாமல் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்ட வேதனையின் ஆழம், இயேசுவுக்காக மட்டுமே என்று என்னால் எப்படிக் கடந்துபோக முடியும்? அது நிச்சயமாக எனக்காகவும், என் மீட்புக்காகவும்தான். அதனால்தான் கானாவூரில் தானே முன்சென்று தேவையில் வாடுவோரின் கவலையை நீக்குகிறார் இறையன்னை. காரணம், இந்த அன்னை கருணையின் வடிவமே!

## அண்ணாவியார்...

(4ம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

மண்டபத்தில் நடைபெற்ற தினகரன் விழாவில் அண்ணாவிமார் மகா நாட்டிலே முப்பதியேழாவது வயதில் 'அண்ணாவியார் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார், 1993 இல் திருமறைக் கலாமன்றத்தினால் 'மூத்த கூத்தர்' கௌரவத்தினை பெற்றுக் கொண்டார். 2008 இல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் 'கலை ஞாயிறு' என்ற விருது அளித்துக் கௌரவித்தது. 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசின், கலைஞர்களுக்கான உயர் விருதாகிய 'கலா பூஷணம்' விருதினை கூத்துத் துறைக் காகப் பெற்றுக்கொண்டார். வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மாகாணமட்டத்தில் வழங்கும் உயர் விருதாகிய 'கலைக்குரிசில்' விருதினை 2022 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார். 2024 இல் ஆம் ஆண்டு பிரதேச கலா சாரப் பேரவை யினர் இவரது கலைச் செயற்பாட்டினை கௌரவித்து 'யாழ் இரத்னா' என்ற விருது அளித்துக் கௌரவித்தனர். இதனை விட குருநகர் கிராம மக்கள், போயிட்டி மக்கள், இவர் கூத்துக்களைப் பயிற்றிய பங்குமக்களென பலரும் பல தடவைகளில் பொன்னாடை போர்த்தி கௌரவங்களைச் செலுத்தியுள்ளனர்.

### முடிவுரை

அமரர் அண்ணாவியார் அ.மரிய தாஸ்(மனோகரன்) அவர்கள் கலைச் செயற்பாடுகளில் சமூகப்பிரக்ஞையுடன் ஈடுபட்டவர், கூத்துக் கலையூடாக சமூகக் கலைசார் வெளிப்பாடுகளுக்கு அரை நூற்றாண்டுகளுக்கு மேல் பங்களித்தவர், புனிதர்களின் வரலாறுகளைக் கூத்துக்கலைக் கூடாக மேடையேற்றி இறைபணியாற்றிவர். தான் அறிந்த கூத்துக்கலையை இளைய சமூதாயத்திற்கு கொடுப்பதிலும் பயிற்றுவிப்பதிலும் பெருவிருப்புடன் செயற்பட்டவர். தனது கிராமம் மட்டுமன்றி, பல்வேறு கிறிஸ்தவ கிராமங்கள், மற்றும் நவரச நாட்டுக்கூத்துக் கலாமன்றம், பாடசாலைகள், குருநகர் பங்குத்தளம், திருமறைக் கலாமன்றம், பாரம்பரியகலைகள் மேம்பாட்டுக் கழகம். எனப் பலவற்றிலும் பங்களிப்புச் செய்தவர், எல்லாவற்றுக்கும் மேலாக இறைபக்தியில் ஊறித்திளைத்துடன் தனது ஒரு மகனை குருத்துவத்திற்கு அளித்தவர். திருவுளப்பணியார் சபையின் பொதுநிலை நிரந்தர அங்கத்தவராக இருந்தும் இறை பணியாற்றிய வர். எனவே முன்னுதாரணமான இக்கலைஞனின் பணிகளை முன்வைப்பதுடன் அவருக்கு அஞ்சலியை 'காவலன்' தெரிவித்து நிற்கின்றது.

# அன்பின் மகிழ்வு

# குடும்பம்: சூழலியல் மேம் பாட்டு உணர்வையும் சுற்றுச்சூழல் ஆன்மீகத்தையும் வளர்க்கும் புனித ஆலயம்

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

34

கடந்த வாரம், பருத்தித்துறை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தால், பொதுநிலையினருக்கான சுற்றுச்சூழல் விழிப் புணர்வு மாநாடு மிருசுவி லுள்ள புனித நிக்கிலாஸ் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் கருப்பொருள்: "சுற்றுச் சூழலை மேம்படுத்தலும் ஆன்மீகத்தை ஆழப்படுத்தலும்" ஆகும். பருத்தித்துறை மறைக்கோட்டத்தின் அனைத்து ஆலயங்களின் பிரதநிதிகள் பங்கேற்ற இம்மாநாடு வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மிருசுவில் பங்கைச் சார்ந்த நீரியல் மேம்பாட்டு அதி காரி திரு. அன்ரன் கமிலஸ் அவர்கள், சமூகத்தில் தற்காலத்தில் நிகழ்ந்து வரும் சுற்றுச் சூழல் அழிவையும் அது சமூகத்தில் ஏற்படுத்தும் எதிர்மறைத் தாக்கங்களைத் தெளிவுபடுத்தி, அதை மேம்படுத்துவதற்காகத் தனிநபர்களும் சமூகங்களும் எடுக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து சிறப்பான உரையை நிகழ்த்தினார். மேலும், பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களில் சிறப்பாகப் பணியாற்றிய பொது நிலைப்பணியாளர்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டு, அவர்களுக்கான நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வை ஒருங்கிணைத்த யாழ் மறை மாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்பணி J மவுலிஸ் அடிகளாருக்கும், பருத்தித்துறை மறைக்கோட்டக் கழக இயக்குநர் அருட்பணி S.J.Q. ஜெயரஞ்சன் அடிகளாருக்கும், இந்நிகழ்வை வெற்றிகரமாக ஒருங்கிணைத்த மறை மாவட்ட மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக உறுப்பினர்களுக்கும் பாராட்டுக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம். இந்த மாநாட்டின் கருத்தியலான "சூழலை மேம்படுத்துவதன் ஊடாக ஆன்மீகத்தை ஆழப்படுத்துவோம்" என்கின்ற இந்த மாநாட்டின் கருப்பொருளை நம் குடும்பங்களில் எவ்வாறு அமுல்படுத்த முடியும் என்பதனை இந்தக் கட்டுரை வெளிக்கொணர்கின்றது.

**1. முதல் தோட்டமாக குடும்பம்:**

பராமரிப்பு மற்றும் பொறுப்பபிற்கான திருவிவிலியத்தின் அழைப்பு சுற்றுச்சூழல் பற்றித் திருவிவிலியம் நமக்குக் கொடுக்கும் ஆழமான உருவகம் என்னவெனில், மனிதகுலத்தின் முதல் வீடு அரண்மனையோ நகரமோ அல்ல, அது ஒரு தோட்டம்தான் (தொடக்கநூல் 2:8-15). இது ஒரு சாதாரண குறிப்பல்ல. ஏதேன் தோட்டம் என்பது கடவுளின் பராமரிப்பின் கீழ் நல்லிணக்கம், அழகு, உயிர் ஆகியவற்றின் இணைப்பை வெளிப்படுத்தும் சின்னமாகும். தொடக்கத்தில் ஆதாமும் ஏவாளும் பெற்ற பணி தோட்டத்தை "பயிரிட்டு பராமரிப்பது." இந்த இரண்டு சொற்கள் இரட்டைப் பொறுப்பை வெளிப்படுத்துகின்றன: பயிரிடுவது என்பது படைப்பை செழித்து மலருமாறு செய்து அதனூடாக மனிதன் தன் வாழ்வை மலர வைப்பதாகும். பாதுகாப்பது: இயற்கையை மனிதனின் சுரணடல்களிரிருந்து பாதுகாத்து அதனை எதிர்காலத்து சந்ததிக்கு இயற்கையின் புனிதத்தன்மையுடன் கையளிப்பதாகும். இன்றைய குடும்பங்களும் தங்கள் சொந்த இல்லங்களில் இருந்து இதே அழைப்பை உண்மையாக்க அழைக்கப்படுகின்றன. குடும்பம் என்பது அன்பின் விதைகள் விதைக்கப்படும் இடமாகவும், எதிர்காலத் தலைமுறைகள் ஆன்மீகத்துடனும் மனிதநேயத்துடனும் வளர்க்கும் புனிதத் தோட்டமாகவும் இருக்கிறது.

**2 குடும்பத் தேர்வுகள்:**

சுற்றுச்சூழலுக்கும் ஆன்மீகத்திற்கும் ஒரு சவால் ஒரு குடும்பம் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சுற்றுச்சூழலையும் ஆன்மீகத்தையும் பாதிக்கிறது. அவர்கள் உண்ணும் உணவை வீணாக்குகிறார்களா அல்லது பாதுகாத்துப் பகிர்கிறார்களா என்பதில், படைப்பை மதிக்கும் மனப்பான்மை வெளிப் படுகிறது. தண்ணீர் மற்றும் ஆற்றலை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதில், அவர்கள் எதிர்கால சந்ததியினருக்கான அக்கறையை வெளிப்படுத்துகிறார்களா அல்லது குறுகிய சுயநல நுகர்வை மட்டுமே தேர்ந்தெடுக்கிறார்களா என்பது தெரிகிறது. அதேபோல், அவர்கள் கழிவுகளை எவ்வாறு கையாழுகிறார்கள் என்பதும், படைப்பாளருக்குக் காட்டப்படும் மரியாதையின் செயலாகிறது.

**3. குடும்பம்:**

சிறிய ஏதேன் தோட்டம் ஒரு குடும்பம் தங்கள் இல்லத்தை "கடவுளின் ஏதேன் தோட்டம்" போல நடத்தும் போது, அன்றாட வாழ்வின் சாதாரண முடிவுகள் கூட புனிதமான பொறுப்புகளாக மாறுகின்றன. உணவு, தண்ணீர், ஆற்றல் போன்றவற்றைப் பயன்படுத்தும் விதத்தில் இருந்து, ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையிலேயே, அந்த இல்லத்தின் ஆன்மீக தரம் வெளிப்படுகிறது. குடும்பம் என்பது வெறும் உடலை வளர்க்கும் இடம் மட்டுமல்ல, அது சுற்றுச்சூழல் நல்லொழுக்கத்தின் முதல் பள்ளி ஆகிறது. இங்கே குழந்தைகள், படைப்பு என்பது சுரண்டுவதற்கான உடைமை அல்ல, மாறாக போற்றிப் பாதுகாக்க வேண்டிய இறைவனின் கொடை என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். இந்த வகையில், ஒவ்வொரு குடும்பமும் தங்கள் வீட்டுச் சூழலில் நம்பிக்கை, அன்பு, பொறுப்பு ஆகியவற்றை விதைத்து வளர்த்தால், அந்த வீடு உண்மையிலேயே "சிறிய ஏதேன் தோட்டம்" ஆகும்.

**5. உறவுகளில் வேரூன்றிய சூழலியல்**

Laudato Si எனும் தனது திருமடலில், திருத்தந்தை பிரான்சிஸ் "படைப்பில் உள்ள அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளது" என்று நமக்கு நினைவூட்டுகிறார். சூழலியல் என்பது வெறும் காடுகள், ஆறுகள், மலைகள் அல்லது பெருங்கடல்கள் பற்றியது மட்டுமல்ல. அது நமது மனித உறவுகளின் தரத்தையும் உட்படுத்துகிறது. குடும்பம் இந்த உண்மையை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகிறது. இயற்கையின் அமைப்புகள் சம நிலையில் இருக்கும்போது படைப்பு செழித்து வளர்வது போல, அன்பு, மரியாதை, பொறுமை ஆகியவை குடும்ப உறுப்பினர்களிடையே வளரும் போது குடும்பமும் செழித்து வளரும். பெற்றோர்கள் அன்போடு குழந்தைகளைப் பராமரிக்கிறார்கள், குழந்தைகள் பெற்றோரிடமிருந்து நற்குணங்களைக் கற்றுக்கொள்கிறார்கள், உடன்பிறந்தவர்கள் ஒன்றிணைந்து வாழ்வின் மகிழ்ச்சியையும் சவால்களையும் பகிர்ந்து கொள்கிறார்கள். மண், நீர், காற்று ஆகியவை ஒன்றை ஒன்று சார்ந்தது போலவே, ஒவ்வொருவரும் குடும்பத்தில் ஒருவரை ஒருவர் சார்ந்துள்ளனர். குடும்பத்திற்குள் நாம் நல்லொழுக்கங்களைப் பயிற்சி செய்யும் போது, சுற்றுச்சூழலைக் காக்கும் பழக்கங்களையும் வளர்க்கிறோம்:

**மரியாதை:**

குடும்பத்தில் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுப்பது, படைக்கப்பட்ட அனைத்து உயிரினங்களின் கண்ணியத்தையும் மதிக்க உதவுகிறது. பொறுமை: ஒருவருக்கொருவர் பொறுமையாக இருப்பது, இயற்கை தன் காலத்தில் கனிகளைத் தரும் வரை காத்திருக்கும் நிலையான வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கிறது.

**அன்பு:** வீட்டில் அன்பை வளர்த்தால், அது விரிவடைந்து படைப்பின் மீதும், அதன் அழிவால் அதிகம் பாதிக்கப்படும் ஏழைகளின் மீதும் பரந்த அன்பாக மாறுகிறது. இதனால் குடும்பம் ஒரு "உயிருள்ள சூழலியல்" (living ecology) ஆகிறது. இங்கே உறவுகள் ஆதிக்கம் செலுத்துவதற்கோ சுரண்டுவதற்கோ அல்ல, மாறாக ஒற்றுமை மற்றும் பரஸ்பர கவனிப்புக்காக இருக்கின்றன. வீட்டில் வளர்க்கப்படும் இந்தப் பிணைப்புகளிலிருந்து, நம் இரக்கம் மற்றும் பொறுப்பு வெளிப்புறமாக விரிகிறது - அண்டை வீட்டாரிடமும், சமூகத்திடமும், இறுதியில் முழுப் படைக்கப்பட்ட உலகத்திடமும்.

**6. வீட்டில் சூழலியல் ஆன்மீகம்**

சூழலியல் ஆன்மீகம் என்பது இறையியலாளர்கள் அல்லது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கே ஒதுக்கப்பட்ட ஒரு விடயம் அல்ல. அது குடும்ப வாழ்க்கையின் அன்றாட ஓட்டத்தில் வாழ்ந்து அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒவ்வொரு உணவும், ஒவ்வொரு பிரார்த்தனையும், வீட்டின் ஒவ்வொரு பழக்கமும் படைப்பிற்கான நன்றியுணர்வும் பயபக்தியும் வெளிப்படும் தருணங்களாக மாற முடியும். ஒரு குடும்பம் மேசையைச் சுற்றிக் கூடி உணவிற்காக நன்றி செலுத்தும் போது, அது வெறும் பிரார்த்தனைச் செயல் மட்டுமல்ல மாறாக அது ஒரு சூழலியல் செயலும் ஆகும். ஏனெனில் நாம் சாப்பிடும் உணவு பூமியிலிருந்து, விவசாயிகளின் உழைப்பின் மூலம் வருவதாயினும், இறுதியில் வாழ்க்கையை நிலைநிறுத்தும் கடவுளிடமிருந்து வருகிறது என்பதை அது ஒப்புக்கொள்கிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுடன் தோட்டத்தில் விதை நட்டு மண்ணின் மீது பிரார்த்திக்கும் போது, அவர்கள் படைப்பு புனிதமானது என்பதைக் கற்றுக்கொடுக்கிறார்கள். தண்ணீர் அல்லது உணவை வீணாக்காமல் இருக்கும்படி குழந்தைகளுக்கு நினைவூட்டும் போது, படைப்பை மதிப்பது நம்பிக்கையின் ஒரு பகுதியாகும் என்பதை அவர்கள் உணர்கிறார்கள். எனவேதான் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல், குடும்பத்தை "குட்டித் திருஅவை" (Domestic Church) என்று அழைத்தார். இதேபோல், குடும்பத்தை நாம் ஒரு "குட்டி ஏதேன் தோட்டம்" என்றும் சொல்லலாம். கடவுளின் படைப்பிற்கான பயபக்தி கற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு, தலைமுறை தலைமுறையாகப் பரிமாறப்படும் முதல் புனித இடம் வீடு ஆகும்.

வீட்டில் பிரார்த்தனை, மன்னிப்பு, அன்பு வளர்க்கப்படுவது போலவே, சூழலியல் விழிப்புணர்வு மற்றும் சூழலியல் ஆன்மீகமும் வேரூன்றி வளர வேண்டும். அப்போது வீடு வெறும் தங்குமிடத்தைத் தாண்டி, புனிதத்திற்கான பள்ளியாக மாறும். இங்கு படைப்பைப் பராமரிப்பதும் ஆன்மீக வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்ததாக இருக்கும். சூழலியல் ஆன்மீகத்தை வாழும் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கடவுளின் மீதான அன்பையும் படைப்பின் மீதான அன்பையும் பிரிக்க முடியாது என்பதைக் கற்றுக்கொடுக்கும்.

**7 புதுப்பித்தலின் முகவர்களாகக் குடும்பங்கள்**

குடும்ப வாழ்க்கையின் சிறப்பு என்னவென்றால், அன்றாடம் செய்யப்படும் சிறிய மற்றும் எளிய செயல்கள் கூட குடும்பத்தைத் தாண்டிப் பெரும் பலன்களை அளிக்கின்றன. ஒரு மரம் நடுதல், பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய பைகளைத் தேர்வுசெய்தல், மறுசுழற்சியில் ஈடுபடுதல், தேவையில்லாதபோது விளக்குகளை அணைத்தல் போன்றவை சின்னச் செயல்களாகத் தோன்றினாலும், அவை உண்மையுடன் கடைப்பிடிக்கப்படும்போது, குடும்பங்களின் வழியே சமுதாயம் முழுவதும் பரவி, சுற்றுச்சூழலைப் புதுப்பித்தலுக்கான அமைதியான ஆனால் வலிமையான இயக்கமாக மாற்றுகின்றன. உண்மையில், குடும்பமே சுற்றுச்சூழல் மாற்றத்தின் விதைத் தளம். குழந்தைகள் முதலில் கவனிப்பு, நன்றியுணர்வு, பயபக்தி போன்ற நல்ல பழக்கங்களை குடும்பத்தில்தான் கற்றுக்கொள்கிறார்கள். உணவு வீணாக்கப்படக்கூடாது, வளங்கள் அறிவுடன் பயன்படுத்தப்படவேண்டும், படைப்பை மதிக்கவேண்டும் என்ற அன்றாட பாடங்களைத் தங்கள் வாழ்நாள்முழுவதுக்குமான பாடங்களாக ஒரு குடும்பம் தங்கள் குழந்தைகளுக்கு தாங்கிச் செல்கின்றது. அத்தகைய குழந்தைகள் பெரும்பாலும் சமூகங்கள், தொழில்கள், திருச்சபைகள் அனைத்தையும் சுற்றுச்சூழல் ஆன்மீகத்தின் மதிப்புகளால் வடிவமைக்கும் பெரியவர்களாக வளருகிறார்கள். இதனால் குடும்பம் தனிப்பட்ட அலகு மட்டுமல்ல, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தின் முக்கிய முகவராகிறது. விசுவாசமான, நிலையான வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டுவதன் மூலம், பராமரிப்பை விட வசதியை மதிக்கும் இக்கால கலாசாரத்தில் வேறுபட்ட வாழ்க்கை முறைக்கான சாட்சியமாக நிற்கிறது. அவர்களின் சாட்சி, அண்டை வீட்டாருக்கும், பள்ளிகளுக்கும், பணியிடங்களுக்கும் சென்றடைந்து, அனைவரையும் படைப்பின் மீதான பொறுப்புகளை உணரச்செய்கிறது. இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும், பூமியைக் குணப்படுத்தும் கடவுளின் பெரிய பணியில் ஒரு சிறிய, ஆனால் முக்கியமான ஒளியாக மாறுகிறது. புதுப்பித்தல் அரசாங்கங்களிடமோ நிறுவனங்களிடமோ தொடங்குவதில்லை அது வீட்டில்தான் தொடங்குகிறது. எளிமையுடனும் நன்றியுடனும் பொறுப்புடனும் கடவுளின் முன்னிலையில் வாழத் தேர்ந்தெடுக்கும் குடும்பங்களோடு அது ஆரம்பமாகிறது.

இந்த வகையில், குடும்பம் ஒரு "சூழலியல் மையம்" எனக் கூறத்தக்கதாகிறது. ஒரு சிறிய குளம் தன்னைக் கடந்தும் சுற்றியுள்ள வாழ்க்கையைத் தாங்கி நிற்பது போல, சூழலியல் ஆன்மீகத்தில் வேரூன்றிய குடும்பம், சமுதாயத்தையும் பூமியையும் குணப்படுத்த உதவும் மதிப்புகளை வெளிப்படுத்துகிறது. உடன்பிறந்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஒரு குழந்தை கற்றுக்கொள்ளும் பொறுமை, பலவீனமானவர்களிடம் இரக்கமாக மாறுகிறது. உணவுக்காக நன்றி செலுத்தும்போது கற்றுக்கொள்ளப்படும் நன்றியுணர்வு, இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்புணர்வாக மாறுகிறது. வீட்டிற்குள் நடைமுறைப்படுத்தப்படும் மரியாதை, அனைத்துப் படைப்புகளின் மீதும் கொண்டாடப்படும் புனித மரியாதையாக விரிவடைகிறது. இந்த வழியில் வாழும் குடும்பங்கள், திருத்தூதர் பணி 2:42- 47ல் காணப்படும் ஆரம்பகால கிறிஸ்தவ சாட்சியத்தை நினைவூட்டுகின்றன. அங்கு விசுவாசிகள் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு, எளிமையாக வாழ்ந்து, அவர்களைச் சுற்றியிருந்தவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தனர். எனவே, குடும்பம் ஒரு தனிமைப் படுத்தப்பட்ட அலகு அல்ல, மாறாக படைப்பின் பெரிய உடலில் உயிர்த்துடிக்கும் ஒரு செல்லாகும். குடும்பங்கள் தங்களை நம்பிக்கையின் குடும்பங்களாக மட்டுமல்ல, சூழலியல் குடும்பங்களாகவும் கண்டால், ஒவ்வொரு வீடும் வாழ்க்கை, நம்பிக்கை, புதுப்பித்தலின் ஒரு சரணாலயமாக மாறும்.

(தொடர்ச்சி 7ம் பக்)

# சீயோலில் புனித கார்லோ அகுதிஸ் நினைவுச்சின்னம்



சியோலில் உள்ள ஆலயம் ஒன்றில் புனித கார்லோ அகுதிஸின் (1991-2006) நினைவுச் சின்னங்கள் வைப்பதற்கான சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. அம்மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு ஜோப்கோ தலைமையேற்று மறையுரை வழங்கினார். அப்போது, "உண்மையான மகிழ்ச்சி என்பது தன்னலம் சார்ந்த வாழ்க்கையில் அல்ல. மாறாக, கடவுளை மையமாகக் கொண்ட வாழ்க்கையில்தான் மலரும்" எனவும், 2000- ஆம் ஆண்டின் முதல் புனிதராக அறிவிக்கப்பட்ட புனித கார்லோ அகுதிஸ், நற்செய்தியைப் பரப்புவதற்குத் தகவல் தொழில்நுட்பத்தைப் - பயன்படுத்தியதற்காக நினைவு கூரப்படுகிறார் என்றும் எடுத்துரைத்தார்.

இன்றைய நற்செய்தி உண்மையான மகிழ்ச்சியைப் பற்றி நமக்கு எடுத்துரைக்கின்றது என்று கூறிய ஆயர் ஜோப்கோ, மகிழ்ச்சி, செல்வம் என்பது, புகழ், இளமை, ஆரோக்கியம் அல்லது சமூக வெற்றியைப் பொறுத்தது என்று உலகம் நமக்குச் சொல்கிறது என்றும், நாம் அதிகமாகப் பயன்படுத்தும் அலைபேசிகள், தகவல் தொழில்நுட்பச் செயலிகள் வழியாகப் பெறும் அதிக சந்தோஷங்கள் நமக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தர முடியாது என்றும் கூறினார்.

கடவுளுடனான ஆழமான தொடர்பு மற்றும் நீடித்த மகிழ்ச்சிக்கான ஒரே பாதை புனிதத்துவ வாழ்வு என்பதைக் கூறிய அவர், "நாம் ஒவ்வொருவரும் நமது தனித்துவமான பாதை யில் புனிதத்திற்கு அழைக்கப்படுகிறோம்" என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டினார். ஒருவர் மற்றவரை பின்பற்றுவதன் வழியாக அல்ல் மாறாக, கடவுள் நமக்கு வழங்கிய பரிசுகளை உண்மையாக வாழ்வதன் வழியாக நாம் புனிதத்துவ வாழ்க்கை வாழ அழைக்கப்படுகின்றோம் என்றும் அவர் எடுத்துரைத்தார்.

# யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா

யாழ். நகர மையப்பகுதியில் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் புனித அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா கடந்த 30.08.2025 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பங்குத்தந்தை அருட்பணி S.M.P.ஆனந்தகுமார் அவர்களின் தலைமையில் வழிபாடுகள் இடம்பெற்றன.

ஜூபிலி ஆண்டின் திருப்பயணத்தை முன்வைத்துப் பல்வேறு கருப்பொருட்களுடன் மறையுரைகளை அருட்பணி றமேஷ் (அ.ம.தி) அடிகளார் ஆற்றினார்.

நற்கருணைப்பெருவிழாஅருட்பணிஇயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் தலைமையில் அருட்பணி வேதநாயகம், அருட்பணி லோறன்ஸ் அடிகளார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

திருவிழாத் திருப்பலியைப் பேரருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் நிறைவேற்றினார். 08.09.2025 அன்று மாலை திருச்சொரூபப் பவனி பக்தி வணக்கத்துடன் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## நம்பிக்கை .....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மொழியைத் திருவழிபாட்டில் திணித்து தங்களை மக்களிடமிருந்து புறம்பாக்கி வாழ்ந்த கருதினால் பேர்க் கோவத்துடன் தனது அதிருப்தியைப் பகிரங்க மாகவே வெளிப்படுத்தினார். கருதினால் பேர்க் போன்றவர்களின் செல்வாக்கு மேற்கொண்டு எடுபடாது. அவர் படிப்படியாக மௌனிக்கப்படுவார்.

**முதல் மறை உரை**

தன்னைத் தெரிந்தெடுத்த 133 கருதினால்களுடன் திருவழிபாட்டை நடத்தி, தனது முதல் மறை உரையில் பதினான்காம் லியோ தெளிவாகச் சொன்னார். ஆயர்கள் அரசர்களாக இருக்கக்கூடாது. ஆயனாக சேவை செய்ய வேண்டும். அதிகாரத்தை மற்றவர்மேல் திணிக்கக்கூடாது. மாறாக அடிபணிந்து பணிபுரிய வேண்டும். உலகளாவி இருக்கும் பல ஆயர்கள், குறிப்பாகத் தம்மை சிற்றரசர்களாக்கி, குருக்கள், துறவிகள், இல்லறத் தோர் மேல் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவோர், பணிவிடை பெறவந்தவர்கள் இந்த உரையைவரவேற்க மாட்டார்கள். தங்கள் நிலைகளில் இருந்து மாறமாட்டார்கள்.

**செயற்படாத சொற்கள்**

போப் பிரான்சிஸ் செய்த சீர்திருத்தங்கள் அனைத்தும் பட்டிதொட்டியெல்லாம் சென்றடைந்தனவா? நிச்சயமாக இல்லை. மேற்கூறிய ஆயர்களும், அவர்களைப் போன்று ஆட்சி செய்யும் குருக்களும் மாறமாட்டார்கள். "இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன எங்கள் நடைமுறை இதுதான்" என்று சொல்லி வாழும் குருக்கள், துறவிகள், ஆயர்கள் நிறையவே கத்தோலிக்கத்தில் உண்டு. ஆனால், அவ்வப்பொழுது சீர்திருத்தங்களை மேற்கொண்ட திருத்தந்தையரை மேற்கோள் காட்டுவார்கள். ஆனால் நடைமுறைப்படுத்தமாட்டார்கள்.

பதின்னான்காம் லியோ அவர்களில் கனிவுண்டு, அதேவேளை கட்டுப்பாடும் உண்டு. இளகிய மனமுண்டு, அதேவேளை நெஞ்சில் உறுதியும் உண்டு. செவிமடுக்கும் பொறுமையுண்டு. அதேவேளை செயலில் காட்டும் பயமின்மையுமுண்டு. போப் பிரான்சிஸ் அவர்களின் சீர்திருத்தங்களில் இருந்து விலகமாட்டார்.

*(வளரும்...)*

## நமது பணிகள் கடவுளின் கரங்களில் உள்ளன

பணியாற்றுவதற்கான ஆற்றல் கடவுளிடமிருந்து வரும் போது அனைத்தும் சாத்தியம் என்றும், நமது பணிகள் கடவுளின் கரங்கலில் உள்ளன, 'நாம் பயனற்ற பணியாளர்கள் நம் கடமையைத்தான் செய்தோம்' என்று வலியுறுத்தும் நற்செய்தியின் வரிகளுக்கேற்ப நாம் வாழவேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கடந்த 22ம் திகதி வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில், அருட்சகோதரிகளைச் சந்தித்தவேளை,கடவுள் பல வலிமையான மற்றும் துணிவான பெண்களைக் கண்டார், அவர்கள் அவரது திட்டங்களை ஏற்றுக்கொண்டு அவரது அழைப்புக்கு "ஆம்" என்று பதிலளிக்கவும், ஆபத்துக்கள் மற்றும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் தயங்கவில்லை என்றும் கூறினார் திருத்தந்தை.

## குடும்பம்.....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**8. பரிந்துரைக்கள்**

(Laudato Si §213) யில் திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டுகிறார்: "கடவுளின் கொடையான வாழ்க்கையை, அதனைத் தாக்கும் பல்வேறு ஆபத்துகளுக்கு மத்தியில் முறையாக வரவேற்று பாதுகாக்கும் இடம் குடும்பமே. மேலும், உண்மையான மனித முன்னேற்றத்தை வளர்க்கக்கூடிய இடமாகவும் அது இருக்க முடியும்." இந்த போதனை, குடும்பத்தைச் சுற்றுச்சூழல் ஆன்மீகத்தின் மையமாக நிறுத்துகிறது.

வாழ்க்கையைப் பெறவும், வளர்க்கவும், பாதுகாக்கவும் வேண்டுமானால், குடும்பமே முதல் மற்றும் மிக முக்கியமான சரணாலயம். இங்கே குழந்தைகள் ஒருவருக்கொருவர் நேசிக்கக் கற்றுக்கொள்வதோடு, தாங்கள் வாழும் பரந்த உலகையும் நேசிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். குடும்பங்கள் வாழ்க்கையை ஒரு புனிதமான பரிசாக மதிக்கும்போது, அவர்கள் படைப்பின் அனைத்தையும் அந்தப் பரிசில் பங்கெடுக்கும் ஒன்றாகக் காணத் தொடங்குகிறார்கள். ஒரு குழந்தையை தீங்கிலிருந்து காக்கும் மனப்பான்மை, ஒரு நதியை மாசுபாட்டிலிருந்து காக்கும் மனப்பான்மையோடு தொடர்புடையதே. இவை இரண்டும் ஒரே நம்பிக்கையிலிருந்து உதித்தவை: வாழ்க்கை விலைமதிப்பற்றது, எனவே அது பாதுகாக்கப்பட வேண்டும். இந்த வகையில், குடும்பம் உண்மையான மனித வளர்ச்சியின் தொடக்கப் புள்ளியாகிறது. இங்கு சுற்றுச்சூழல் பொறுப்பு வெறும் கோட்பாடாகக் கற்பிக்கப்படுவதில்லை, மாறாக அன்பின் நடைமுறையாக வாழப்படுகிறது.

**9. நடைமுறைப் பயன்பாடுகள்**

சுற்றுச்சூழல் ஆன்மீகம் என்பது பெரும் சாசகங்களில் தொடங்குவதில்லை. அது குடும்பங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறிய, ஆனால் விசுவாசத்துடன் செய்யப்பட்ட செயல்களில் ஆரம்பமாகிறது. இவ்வாறான செயல்கள் படிப்படியாக இதயங்களையும் பழக்கங்களையும் படைப்பின் மீதான ஆழமான அக்கறைக்குத் திருப்புகின்றன. குடும்பம் "சுற்றுச்சூழல் பழக்க வழக்கங்களை" உருவாக்குங்கள். விளக்குகளை ஒன்றாக அணைப்பது, வாரத்தில் ஒரு நாளை "இறைச்சி இல்லாத நாள்" எனக் கடைப்பிடித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல் போன்ற எளிய பழக்கங்கள் அர்த்தமுள்ள பழக்கவளக்கங்களாக மாறும். குடும்பம் ஒருமனதாகச் செயல்படும் போது, பொறுப்புடன் வாழ்வதற்கான உறுதியான மனப்பாங்கு உருவாகிறது. படைப்பின் சின்னங்களுடன் ஒரு பிரார்த்தனை வீட்டு மூலை ஒரு செடி, ஒரு கிண்ணம் தண்ணீர், அல்லது இயற்கையில் சேகரிக்கப்பட்ட கற்கள் போன்றவை, படைப்பே கடவுளை மகிமைப்படுத்துகிறது என்பதை குடும்பத்திற்குத் தொடர்ந்து நினைவூட்டும். இங்கு ஒன்றாக ஜெபிப்பது நம்பிக்கையையும் படைப்பின் மீதான அக்கறையையும் இணைக்கிறது. குழந்தைகளை நன்றியின் ஜெபங்களை எழுத ஊக்குவிக்கவும். உணவு நேரத்தில் அல்லது குடும்ப ஜெப நேரத்தில் சத்தமாக வாசிக்கப்படும் இவ்வாறான ஜெபங்கள், குழந்தைகள் இயற்கை உலகை சாதாரணமாக அல்லாது, மரியாதைக்குரிய புனிதப் பரிசாகக் காணக் கற்றுக்கொடுக்கின்றன.

ஞாயிற்றுக்கிழமை ஓய்வை மீண்டும் அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுங்கள். குடும்ப உணவு மற்றும் வழிபாட்டைத் தாண்டி, ஞாயிற்றுக்கிழமைகளை "படைப்பின் நேரம்" என்று ஒதுக்கலாம்: பூங்காவில் ஒன்றாக நடப்பது, தோட்டப்பணி செய்வது, வெளிப்புற இயற்கையின் அழகை அனுபவிப்பது போன்றவை. இதனால் இறைவனின் நாள், படைப்பின் மீதான அக்கறையுடன் இணைந்து, உடலையும் ஆன்மாவையும் புத்துணர்ச்சியூட்டுகிறது. இந்தச் சிறிய, ஆனால் நினைத்துக் கொண்டு செய்யப்பட்ட படிகள் வழியாக, குடும்பங்கள் அன்பும் பொறுப்பும் நிரம்பிய "வீட்டுத் தோட்டங்கள்" என்ற தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்துகின்றன. இவை வாரம் தோறும் மீண்டும் மீண்டும் நடைமுறையில் கொண்டு வரப்படும் போது, பரந்த உலகில் பலனைத் தரும் சுற்றுச்சூழல் மாற்றத்தின் விதைகளாக மாறுகின்றன. ○


**விண்ணக வாழ்வில் 35ம் ஆண்டுகள் நிறைவு**

மண்ணகம் 01 . 06 . 1910

விண்ணகம் 30 . 09 . 1989



**அமரர் சிமியோன் ஞானப்பிரகாசம்**

**(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகஸ்தர்)**

'இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"(லூக். 23-43)

இறப்பின் நினைவில் 35 ஆண்டுகள் சென்றாலும்
நீங்கள் பெற்ற மழலைகள் உள்ளத்தில்
என்றும் வாழ்கிறீர்கள்
இறைவனிடம் அனுதினமும் வேண்டி வருகிறோம்

உயரப்புலம்,
ஆனையூர்.

AD-102

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

**65வது பிறந்தநாள் நினைவுகளுடன்**

மண்ணில் 21 . 09 . 1959

விண்ணில் 31 . 07 . 2024



**அமரர் அந்தோனி அமலோற்பவநாயகம்**

**(ஆனந்தன்)**

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். (யோவான் 11:25)

வறுமையிலும் சரி வளமான வாழ்விலும் சரி
எளிமையாக, நேர்மையாக, பொறுமையாக
யாரிடமும் மனம் நோகாமல், நல் ஆலோசகராக
வாழ்ந்த உங்கள் வாழ்வின் நினைவுகளை மறவோம்

நல்லாயன் வீதி,
இளவாலை.

குடும்பத்தினர்

## தேசிய கத்தோலிக்க இளையோர் ஞாயிறு தின சிறப்பு நிகழ்வு





தேசிய கத்தோலிக்க இளையோர் ஞாயிறை சிறப்பித்து யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது. இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை யோன் குருஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் தலைவர் செல்வன் நிராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இளவாலை மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் தலைமையில் திருப்பலியும் திருப்பலி நிறைவில் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து யாழ். பிரதான வீதி ஊடாக புனித மரியன்னை பேராலயத்தை நோக்கிய இளையோர் எழுச்சிப் பேரணியும் இடம்பெற்றன. தொடர்ந்து பேராலய மண்டபத்தில் அரங்கநிகழ்வுகள் இடம்பெற்றதுடன் இந்நிக ழ்வில் ஓய்வுநிலை அதிபர் திரு. அகஸ்ரின் அவர்களின் “தற்கால இளையோரும் இறைவார்த்தையும்” என்னும் தலைப்பிலமைந்த சிறப்பு ரையும் குருநகரப் பங்கு இளையோர் ஒன்றியத்தினரின் யூபிலிஆண்டு வில்லுப்பாட்டும் அதிஸ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெற்றன.

யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப்பாளரும் வன்னி கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநருமான அருட்தந்தை செபஜீவன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் ஆணைக் குழுவின் முந்நாள் தலைவர் திரு. ஜெயந்த் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததுடன் மறைக்கோட்ட இணை ப்பாளர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட பங்குகளை சேர்ந்த 170ற்கும் அதிகமான இளையோர் பங்குபற்றியிருந்தனர்.

## புதிய பாடத்திட்டம் தொடர்பான கருத்தமர்வு



இலங்கைத் தேசிய கல்வி நிறுவகமும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகளின் கத்தோலிக்க பாட ஆசிரியர்களுக்கான புதிய பாடத்திட்டம் தொடர்பான கருத்தமர்வு கடந்த 10ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தேசிய கல்வி நிறுவக கிறிஸ்தவ பாட இணைப்பாளர் அருட்தந்தை மால் பெர்னான்டோ அவர்களின் தலை மையில் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய பாடத்திட்டம் தொடர்பான கருத்தமர்வு, கருத்துரைகள், குழு ஆய்வுகள், குழுச்செயற்பாடுகள், விளக்கவுரைகள் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் 65ற்கும் அதிகமான ஆசிரியர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## முல்லைத்தீவு மறைக்கோட்ட பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடல்



முல்லைத்தீவு மறைக்கோட்ட பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகி 14ஆம் திகதி வரை மாங்குளம் டொண்பொஸ்கோ சிறிய குருமடத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட பீடப்பணியாளர் இணைப்பாளர் அருட்தந்தை எட்வின் நரேஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை இராஜசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருப்பலி, நற்கருணை வழிபாடு, திரைப்படக் காட்சிப்படுத்தல், விளையாட்டுக்கள், உதவுமுறை பயிற்சி, தீப்பாசறை, மகிழ்வூட்டல் நிகழ்வுகள், அருட்தந்தை விஜேந்திரன் தலைமையிலான குழுவினரின் தலைமைத்துவப் பயிற்சி, கருத்துரைகள், அருட்தந்தை றொபின்சன் ஜோசப் அவர்களின் புனித கார்லோ அக்குட்டீஸ் பற்றிய கருத்தமர்வு என்பவற்றுடன் சிறப்பு நிகழ்வாக யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்களின் “வந்து பாருங்கள்” இறையழைத்தல் நிகழ்வும் இடம்பெற்றன. இவ் இறையழைத்தல் நிகழ்வில் குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் மற்றும் 12 குருமட மாணவர்கள் இணைந்து குறுநாடகம், பாடல், குழுச்செயற்பாடுகள் ஊடாக பீடப்பணியாளர்ளை வழிப்படுத்தினர். மறைக்கோட்ட பங்குகளைச் சேர்ந்த 125 பீடப்பணியாளர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## முதல்நன்மைப் பாசறை



பண்டத்தரிப்புப் பங்கில் முதல்நன்மை அருட்சாதனத்திற்குத் தயார்ப்படுத்தும் பிள்ளைக ளுக்கான பாசறை கடந்த 14ஆம் திகதி பண்டத் தரிப்பு புனித பற்றிமா அன்னை திருத்தலத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் தலைமையிலான குழுவினர் வளவாளர்களாகக் கலந்து விளையாட்டுக்கள், குழுச்செயற்பாடுகள், கருத்துரைகள் என்பவற்றின் ஊடாக மாணவர்களை நெறிப்படுத்தினர்.

## பாசையூரில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம்



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஜேம்ஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 89 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தால் பசுமைத் திட்டம்



சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி பகுதியில் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தால் காலநிலை விவசாய பசுமைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை செபஜீவன் அவர்களின் தலைமையில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் மாதிரி விவசாய பண்ணை ஆரம்பித்து வைக்கப்பட்டு அதில் நீண்ட, குறுகிய மற்றும் நடுத்தர கால பயன்தரும் மரக்கன்றுகளும் நாட்டிவை க்கப்பட்டன. இந்நிகழ்வில் நிர்வாக அலுவலர்கள், விவசாய போதனாசிரியர் மற்றும் திட்டத்தின் விவசாய பயனாளிகள் கலந்துகொண்டனர்.

## துன்னாலை புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா



கரவெட்டிப் பங்கு துன்னாலை புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத் தந்தை அருட்தந்தை விஜின்ரஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 14ஆம் திகதி நடை பெற்றது. 05ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 13ஆம் திகதி நற்கருணைவிழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ரவிராஜ் அவர்க ளும் நற்கருணைவிழாத் திருப்பலியை ஆனை க்கோட்டை பங்குத்தந்தை அருட்தந்தை ஜேசுர ட்ணம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொ டுத்தனர்.

## பேரருட்தந்தை இராயப்பு யோசப் நினைவுக் கிண்ணப் போட்டிகள்






மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயரும் நெடுந்நீவு மண்ணின் மைந்தனுமான பேரருட்தந்தை இராயப்பு யோசப் அவர்களின் நினைவாக நெடுந்தீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட ஆயர் கிண்ணப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வு கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்களின் தலைமையில் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெண்களுக்கான கிளித்தட்டு, கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் மற்றும் காற்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப்போட்டிகள் இடம்பெற்றதுடன் ஆயர் கிண்ணத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கல்விசார் போட்டிகள் மற்றும் விளையாட்டுக்களில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கிவை க்கப்பட்டன. யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை அலோசியஸ் அன்ரோ டெனீசியஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கிறிஸ்மஸ் கரோல் குழுப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

இவ் ஆண்டு கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டியை நடாத்த இலங்கை கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு குழுவாக விண்ணப்பிக்க முடியுமெனவும் இப்போட்டியில் பங்குபற்றும் ஒரு குழுவில் ஆகக்குறைந்தது 10 உறுப்பினர்களும் கூடியது 15 உறுப்பினர்களும் பங்குபற்ற முடியுமெனவும் திணைக்கள பணிப்பாளர் திருமதி சதுரி பிந்து அவர்கள் தெரிவித்துள்ளார். அத்துடன் 3 நிமிடங்களை உள்ளடக்கிய புதிய படைப்பாக இப்பாடல் இருப்பதுடன் இப்போட்டியில் பங்குபற்றும் குழு திணைக்களம் வழங்கும் பொதுப்பாடலையும் பாட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் குழுவின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், வடஸ்அப் செயலி இலக்கம் என்பவை உள்ளடங்கலாக விண்ணப்பப் படிவத்தை ஆங்கிலத்தில் தயாரித்து அதனுடன் அருட்தந்தை, அல்லது நிறுவனத்தலைவரின் சிபாரிசு கடிதத்தை இணைத்து ஐப்பசி 10ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம், 3ஆம் மாடி, இல 180, டீ.பீ.ஜாயா மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பவும்.

## முல்லையில் தகவல் தொழில் நுட்பத்தில் மாணவர்கள் தேர்ச்சி

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் கப்புச்சியன் அருட்தந்தையர்களால் நடாத்தப்படு Capital Campus இல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் கற்கைநெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான NVQ3 தர இறுதித்தேர்வு கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது. இப்பரீட்சைக்கு 16 மாணவர்கள் தோற்றி அனை வரும் சித்தியடைந்துள்ளனர். அத்துடன் Capital Campus இன் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளதாக இயக்குநர் அருட்தந்தை டேவிட் டொமினிக் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## பூனைத்தொடுவாய் வேளாங்கண்ணி அன்னை ஆலயத் திருவிழா

கட்டைக்காடு பங்கு பூனைத்தொடுவாய் வேளாங்கண்ணி அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை விமல சேகரன் வசந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 14ஆம் திகதி நடைபெற்றது. 12ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்ப மாகி 13ஆம் திகதி நற்கருணைவிழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். பல்கலை க்கழக ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை மைக் டொனால்ட் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை பங்குத்தந்தை அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.